வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.02.2023 வியாழக்கிழமை | இதழ் : 76 | பக்கங்கள் : 16

# மன்னார், பூநகரி காற்றாலை மின்சார திட்டம் அதானி குழுமத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

## முறையான ஆய்வு, அனுமதியின்றி உடன்பாடானதாம்

கொழும்பு, பெப். 23

**மன்னார், பூநகரியில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த இந்தியா வின் அதானி குழுமத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது.**

இதனிடையே, எந்த ஆய்வுகளும் அனுமதிப் பத்திரங்களும் இன்றி முத லீட்டு சபையும் இந்தியா வின் அதானி குழுமமும் நேற்று மாலை உடன் படிக்கையில் கையொப்ப மிட்டுள்ளன என்று குற் றச்சாட்டுகள் எழுந்துள் ளன.

ஒப்பந்தத்தின் படி மன்னாரில் 250 மெகா வோட்ஸ், பூநகரியில் 100 மெகா வோட்ஸ் காற் றாலை மின்சார உற்பத்தி திட்டம் 44. 2 கோடி அமெரிக்க டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 16 ஆயிரத்து 129 கோடி ரூபாய் செலவில் அமையவுள்ளன. இது இரு ஆண்டுகளில் நிறை வுத்தப்படும் என்றும் 15

## பிரபாகரனின் மகனின் மறைவில் மகிழ்ந்தவரை ஆதரிக்கமாட்டேன்!

### தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர்



சென்னை, பெப். 23

தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் மறை வைக் கொண்டாடி மகிழ்ந்த காங்கிரஸ் கட்சியின் ஈ. வி. கே. எஸ். இளங்கோவனுக்கு ஆதரவா க வாக்கு சேகரிக்கமாட்டேன் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி. வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து வெளியாகும் பிரபல 15

## வரி திருத்தத்துக்கு எதிராக நேற்றும் போராட்டங்கள்!

கொழும்பு, பெப். 23

முறையற்ற வரித் திருத்தத்திற்கு எதிராக நேற்று புதன்கிழமை தேசிய எதிர்ப்பு தினத்தை செயல்படுத்தி, தொழில் வல்லுநர்களின் தொழிற் சங்க கூட்டமைப்பு எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தது.

இதன் பிரதான ஆர்ப் பாட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் 15

## மருத்துவமனைகளில் இன்று பணி பகிஷ்கரிப்பு போராட்டம்!

கொழும்பு, பெப். 23

நாடு முழுவதும் உள்ள சகல அரச மருத்துவமனை களிலும் இன்று காலை 8 மணி முதல் 12 மணிவரை பணிப் பகிஷ்கரிப்பு முன் னெடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்ட மைப்பு நேற்று அறிவித் தது.

இந்த வேலை நிறுத் தப் போராட்டத்துக்கு நாடளாவிய ரீதியில் 30 தொழில் சங்கங் கள் ஆதரவை 15

## இலங்கை - இந்தியாவின் உறவு பாகிஸ்தானிலிருந்து வேறானது!

### இந்திய வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, பெப். 23

இலங்கைக்கும் இந்தி யாவுக்கும் இடையிலான உறவு பாகிஸ்தானுட னான உறவிலிருந்து முற்றிலும் வித்தியாசமா னது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தெரிவித் துள்ளார்.

பொருளாதார நெருக் கடியில், தவிக்கும் பாகிஸ்தானுக்கு இந்தியா உதவவில்லை. அயல் நாட்டுக்கு உதவி என்ற ரீதியில் இலங் கைக்கு இந்தியா அளிக்கும் உதவி 15

## விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் குடியேற வேண்டும்!



### யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், பெப். 23

வலி. வடக்கில் இராணுவத்தினர் விடுவித்த காணிகளை உரிமையாளர் கள் குடியேறுவதில் தயக்கம் காட்டு கின்றனர். மக்கள் குடியேறுவதன் மூலமே படையினர் வசம் உள்ள காணிகளை மேலதிக மாக விடுவிக்க முடியும் - என்று தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன்.

மாவட்ட செயலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் 15

## இந்திய மீனவருக்கு அனுமதி இரு நாடுகளும் ஆராய்வு

### பாராளுமன்றத்தில் கூறினார் அலி சப்ரி

கொழும்பு, பெப். 23

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பில் இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன் றத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப் பினர் சாள்ஸ் நிர் மலநாதன் எழுப்பிய 15

## இந்தியாவுக்கு மீன்பிடி அனுமதி; மக்களை திரட்டி போராடுவோம்!

### பாராளுமன்றில் கஜேந்திரன் எம். பி.

கொழும்பு, பெப். 23

வடக்கின் கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கை யில் ஈடுபட இந்திய மீன வர்களுக்கு அனுமதி வழங்கப்படுமாக இருந் தால் அதற்கு எதிராக மக் களை அணிதிரட்டி போராட்டம் நடத்து வோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் 15

## யாழ். போதனா மருத்துவமனையின் குடிதண்ணீர் பாதுகாப்பாகவுள்ளது!

### கிருமி தாக்கத்தால் 400 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். போதனா மருத்துவமனையின் கிணற்றின் தண்ணீரில் கிருமித் தொற்று அறியப் பட்டது. இது, தற்போது சுத்திகரிக்கப்பட்டுள்ளது. எனினும், முன்னர் 400 பேர் வரை கிருமித் தொற் றால் பாதிக்கப்பட்டனர் என்று மருத்துவமனை யின் பிரதிப் பணிப்பாளர் சி. யமுனானந்தா தெரி



வித்துள்ளார்.

யாழ். போதனா மருத் துவமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியா ளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறியவை வரு மாறு,

யாழ். போதனா மருத் துவமனையில் தேங்கும் கழிவுநீர் சுத்திகரிக்கப் பட்டு பண்ணைக்கடலில் செலுத்தப்பட்டு வரு கின்றது. இது கடந்த இருபது வருடங்களாக செயல்பட்டு வரும் நடை முறையாகும். 15

## இறுதிப் போரில் 9 கப்பல்களை அழிக்க அமெரிக்காவே உதவியது!

### பகிரங்கப்படுத்தினார் அலிசப்ரி

கொழும்பு, பெப். 23

தமிழ் மக்களின் சுய உரிமை பாதுகாக்கப்படு தற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் - என்று கூறியுள்ள வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி, நாட்டில் இறுதி யுத்தத்தின் போது இலங் கைக்கு வந்த ஒன்பது கப்பல்களை எமது படை யினர் வெற்றிகரமாக அழிப்பதற்கு அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் உறுதுணையாக அமைந் தது என்பதை மறந்து விடக்கூடாது - என்றும் தெரிவித்தார். நேற்று பாராளுமன்றில் உரை யாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஒன்றாக வாழும் மக்கள் என்பதை உணர்ந்து கொண்டு



அவர்களின் சுய உரிமை பாதுகாக்கப்படும் வகை யில் வாய்ப்புகள் வழங்கப் பட வேண்டும். தமிழ் மக்களின் சுய உரிமை பாதுகாக்கப்படும் வகையில் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

இந்தியாவில் ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் கு. அண்ணாமலைதான் இப்போது இலங்கையில் பேசுபொருள்.

தெற்கில் சிங்கள கடும் கோட்பாளர்கள் மாத்திரமல்ல, வடக்கிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அவரை விமர்சிப்பதற்காகவே தங்கள் நேரத்தை செலவிட்டு வருகின்றனர்.

அண்மையில் இலங்கைக்கு வந்த அண்ணாமலை, பதின்மூன்றை அமுல்படுத்துவது பற்றியும் வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றியும் தெரிவித்த கருத்துக்கள் சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ போன்றவர்களை கோபப்படுத்தியிருப்பது நமக்கு ஆச்சரியமானதல்ல. அப்படி அவர்களுக்குக் கோபம் வரவில்லை என்றால்தான் ஆச்சரியப்படவேண்டும். ஆனால், அதற்காகவே ஊடக மாநாடு ஒன்றை நடத்தி அவரை கண்டித்திருக்கிறார் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அவர் இந்த ஒற்றையாட்சிக்குள் தீர்வை எந்தக் கட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது அவரை தெரிந்தவர்களுக்கு தெரியும். ஆனால் மனுசன், அதனை அடைவதற்காக ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு அதன் அரசமைப்பை மதித்து நடப்பேன் என்று பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்வதை யாரும் கேள்விக்கு உட்படுத்தப் போவதில்லைத்தான்.

தமிழ் மக்களின் உரிமைகளை ஒற்றையாட்சிக்குள் பெற்றுவிட முடியாது என்பதை யாரும் இதுவரை மறுத்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் ஒற்றையாட்சியை எதிர்க்கின்ற ஒருவர் அதனை ஏற்றுக்கொண்டு பாராளுமன்றம் செல்வது, தான் தமிழ் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தலைவர் என்பதை உலகுக்கு காட்டுவதற்காகத்தான். அதனையும் யாரும் குறை சொல்லப் போவதில்லை. தனது இலட்சியத்தை அடைவதற்காக அவர் பாராளுமன்றத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது. அதற்காக அவர் ஒற்றையாட்சியையும் ஏற்றுக்கொண்டு சத்தியப்பிரமாணம் செய்கிறார். அது அல்ல நாம் சொல்ல வருவது.

அண்ணாமலை இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய பின்னர் தெரிவித்த கருத்துக்களை, கஜேந்திரகுமார் மறுத்திருப்பதை முதலில் கவனியுங்கள்.

'இந்தியாவில் இருந்து வந்தவர்கள் இங்கு வந்து தமது முகவர்களைத்தான் சந்தித்தார்களே தவிர, பொதுமக்களை சந்திக்கவில்லை. தாங்களே 13ஐ அமுல்படுத்துமாறு கூறிவிட்டு வந்து, இங்கு இருக்கின்ற முகவர்கள் அதனை கதைக்கும் போது ஏதோ ஈழத்தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்வதாகக் கூறுவது பொருத்தமற்ற கருத்து.' - இதுதான் கஜேந்திரகுமார் சொல்ல வந்த முக்கியமான கருத்து.

ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டாவது பாராளுமன்றத்துக்கு செல்வது எதற்காக? தான் தமிழ் மக்களின் பிரதிநிதி என்பதை சொல்வதற்காகத்தானே. அப்படியெனில், அவர் சொல்வது அவருக்கு வாக்களித்த மக்கள் சொல்வது போன்றதுதான் என்பது அவருக்கு தெரியாததல்ல.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட அனைத்து கட்சிகளும் பதின்மூன்று தொடர்பாக என்ன கருத்தைக் கொண்டிருக்கின்றன?

அவரே சொல்வதுபோல அவை இந்தியாவின் முகவர்களாகவே இருந்து விட்டுப்போகட்டும்.

'தமிழ் மக்கள் கடந்த 1987ஆம் ஆண்டு, இந்த 13ஆவது சீர்திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதாகக் கூறி அதனை நிராகரித்து வந்துள்ளார்கள். 13ஆவது சீர்திருத்தம்தான் தீர்வு எனக்கூறி இந்திய நாட்டின் பொம்மைகள், எடுபிடிகள் அல்லது கூலிகள் இங்கு அரசியலில் செயல்பட்டுக் கொண்டு இருந்தும்கூட அவர்கள் இங்கு தேர்தல் கேட்டு வாக்குப் பெற முடியாத சூழ்நிலைதான் உள்ளது. 13ஆவது சீர்திருத்தத்தை நியாயப்படுத்துவதற்காக அது தீர்வல்ல, இருக்கிறதைத்தான் கேட்கிறோம், எமக்கு தேவையானது சமஷ்டி, சுயநிர்ணயம் போன்ற விடயங்களை கூறித்தான் தமிழ் மக்கள் மத்தியில் அதனை திணிக்கப் பார்க்கின்றனர்.'

மேலே இருப்பது கஜேந்திரகுமாரின் வரிகள்தான். அவர் சொல்வது 13ஐ ஆதரிப்பவர்கள் இங்கு வாக்குப் பெறமுடியாத நிலைமைதான் இருக்கிறதாம். ஒரு சின்ன கூட்டல் கழித்தல் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் முதலில் யாழ்ப்பாண மாவட்ட மக்களின் மனநிலையை பார்ப்போம்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் முன்னணியினர் பெற்ற வாக்குகள்: 55,303. அதாவது ஐம்பத்தி ஐந்து ஆயிரம். ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் பெற்ற வாக்குகள்: 151, 022 வாக்குகள்.

ஏனைய கட்சிகள் பெற்ற வாக்குகள்: (அதாவது மாகாண சபையே போதும் என்கின்ற கட்சிகள்): 152, 805 வாக்குகள்.

ஆக, அவர்கள் சொல்வது போல மாகாண சபையை கைவிடக்கூடாது என்ற கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள்: 303,827. மூன்று இலட்சத்துக்கும் அதிகம்.

மன்னாரில் முன்னணி பெற்ற வாக்குகள்: 1,198 வவுனியா: 3,993 முல்லைத்தீவு: 2,472.

இப்போது சொல்லுங்கள், அண்ணாமலை இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் தமிழ் மக்கள் பதின்மூன்றுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று சொன்னதில் என்ன தவறு?

அதற்காக இந்த ஊர்க்குருவியும் அதனை திணிக்கப்பார்க்கிறார் என்று கிளம்பிவிடாதீர்கள்.

- ஊர்க்குருவி

# எரியூட்டப்பட்ட சத்திர சந்தையை நவீனமாக நிர்மாணித்து தாருங்கள்

## ஜனாதிபதியிடம் வர்த்தகர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 23

எரியூட்டப்பட்ட சத்திர சந்தையை நவீன தொழில்நுட்ப முறையில் நிர்மாணித்துத் தருமாறு யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அண்மையில், யாழ்ப்பாணத்துக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ். மாவட்டத்தை சேர்ந்த வர்த்தகர்கள், முதலீட்டாளர்களை பிரத்தியேகமாக சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே இந்தக் கோரிக்கைகளை யாழ். வணிகர் கழகத்தினர் முன்வைத்தனர்.

மேலும், 1981ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டபோது நகரத்தின் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்த சத்திர சந்தையும் எரிவுற்றது. அது நடந்து நாற்பது வருடங்களுக்கு மேலாகியும் புதிதாக சத்திரச் சந்தை நிர்மாணிக்கப்படவில்லை. சுமார் ஓர் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நகரத்தின் மத்தியில் உள்ள இந்த இடத்தில் 100இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் சிறு குடில்களிலேயே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல தடவைகள் நாம் அரசாங்கத்திடமும் உரிய அமைச்சரிடமும் கோரிக்கை விடுத்தும், இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. எனவே, பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களின் நலன் கருதி சத்திரச் சந்தையை பல மாடிகளை கொண்ட நவீன தொழில் நுட்ப முறையில் புதிதாக நிர்மாணித்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளோம் - என்றனர்.

மேலும், யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள தீவுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு இல்லை. குறிப்பாக, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற தீவுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு இல்லை. இதனால் அங்குள்ள மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதுடன், அத்தீவுகளுக்குரிய அபிவிருத்தி வர்த்தக தொழில்துறை, சுற்றுலாத்துறை போன்றவற்றை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது.

ஆகவே, தீவுப்பகுதியின் அபிவிருத்திக்கு முக்கியமாக தேவைப்படும் பொருட்களை சுலபமாக காவிக் கொண்டு கடலில் பயணிக்கக்கூடிய பாதை (எல். சி. எம்.) வழங்குவதன் மூலம் தீவுப் பகுதிகளை சுலபமாக அபிவிருத்தி செய்வதுடன், உட்கட்டமைப்பை மேம்படுத்தி வர்த்தக கைத்தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறைகளையும் மேம்படுத்த முடியும். எனவே, இதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முன்னணியினருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 18 பேர் தொடர்பான வழக்கு ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு எதிராக யாழ். நகரில் போராட்டம் நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் 18 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு அன்றிரவே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது. (ஐ)

# புத்தலவில் நேற்று மீண்டும் நிலஅதிர்வு

கொழும்பு, பெப். 23

நாட்டில் நேற்று சிறியளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மொனராகலை மாவட்டத்தின் புத்தல பகுதியிலேயே நேற்று மீண்டும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நேற்று முற்பகல் 11.44 மணியளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக தெரியவருகிறது.

புத்தல பிரதேசத்தில் 3.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

எனினும் பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் கூறியுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் அண்மையில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 23

சமயஜோதி கதிர்காமநாதன் நிஜலிங்கம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் ஆலய நிர்வாகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக வாராந்த சிறப்பு சொற்பொழிவை ஒழுங்கமைத்து வழங்கியமைக்காகவும், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் 'சிவநெறிப் பிரகாசர்' விருது வழங்கப்பட்டமைக்காகவும் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

# மானிப்பாயில் நாளை புத்தக அரங்க விழா!

யாழ்ப்பாணம், பெப். 23

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின் எட்டாவது நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 'ஈழத்து நூல்களை அறிவோம்' என்ற தொனிப் பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் எழுத்தாளரும் பொறியியலாளருமான ஐ. சாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை மருத்துவர் கந்தையா குருபரனின் 'தாயாகிய தனித்துவம்' என்ற நூல் பற்றி உளவளத் துணையாளர் நா. நவராஜ், சி. வ. ஏழுமலைப்பிள்ளையின் 'ஆணை' நாடக நூல் தொடர்பாக ஆசிரியரும் வேடதாரி சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான எஸ். ரி. அருள்குமரன், யாழ். பல்கலைக்கழக மாணவி முல்லை முகுந்தினியின் "இடர் சுமந்த மேனியர்" நாவல் தொடர்பாக இளம் ஆய்வாளர் முருகையா சதீஸ், கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழான "தாயகம்" சஞ்சிகையின் 107ஆவது இதழ் தொடர்பாக கலைஞரும் தலைமைத்துவ பயிற்சியாளருமான தெ.சந்திரகுமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)

Eelanadu ஈழநாடு
23.02.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## 13ஐ எதிர்க்கும் பைத்தியக்காரர்கள்?

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதை எதிர்ப்பவர்கள் பைத்தியக்காரர்களென்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார். அண்மைக்காலமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதை எதிர்ப்பதாகக் கூறி பலர் கூச்சலிட்டு வருகின்றனர்.

ஒரு புறம் பௌத்த பிக்குகள் அணியொன்று கூல்சலிடுகின்றது. இன்னொரு புறம், கோட்டாபயவின் வீழ்ச்சியை தொடர்ந்து, மக்களை எதிர்கொள்ள முடியாமல், தலைமறைவாகிய அரசியல்வாதிகள் சிலரும் 13 எதிர்ப்புடன் மீளவும் தென்னிலங்கை அரசியலில் இடம்பிடிக்க முற்படுகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான் சந்திரிகா இவ்வாறு கூறுயிருக்கின்றார்.

கடந்த 35 வருடங்களாக அரசமைப்பில் இருக்கின்ற ஒரு விடயத்தை எதிர்ப்பதன் மூலம் அரசியல் வியாபாரம் செய்ய முடியுமென்று நம்புமளவுக்கே, இந்த நாட்டின் அரசியல் சூழல் இருக்கின்றது. தென்னிலங்கையின் படித்த அரசியல்வாதிகள் என்போர் காலத்திற்கு காலம் தங்களது அதிகார மோகத்துக்காக சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் விரோதத்தை விதைத்தனர். இது ஒரு வாழையடி வாழையாக தொடர்கின்றது.

சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியும் இதற்கு பெருமளவில் விதிவிலக்காக இருந்ததாகக் கூறிவிட முடியாது. ஆனால், 13இற்கு அப்பால் செல்லக்கூடியவாறான அரசியல் தீர்வு ஆலோசனை தொடர்பில் சந்திரிகா பரீசீலித்திருந்தார். சிங்கள ஆட்சியாளர்கள் தாங்களாக அரசியல் தீர்வு தொடர்பில் சிந்தித்த ஒரேயொரு சந்தர்ப்பமாக சந்திரிகாவின் காலத்தை மட்டுமே குறிப்பிட முடியும்.

ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசியபோதிலும், அதற்கு பின்னால் வெளியாரின் தலையீடுகள் இருந்தன. மனித உரிமைசார்ந்த அழுத்தங்களுக்கு முகம் கொடுத்திருந்த சூழலில் மேற்குலகுடன் ஒத்துப் போவதற்கான ஒரு துருப்புச்சீட்டாகவே புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்பட்டது.

இப்போதும் ரணில் விக்கிரமசிங்கவும் வெளித் தலையீடுகளை கருத்தில் கொண்டே அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றார். இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசிவருகின்ற சூழலில்தான் ஆகக் குறைந்தது 13 தொடர்பிலாவது பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்ப்பது மட்டும் பைத்தியக்காரத்தனமல்ல மாறாக, கடந்த 35 வருடங்களாக அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களைக்கூட, அமுல்படுத்த முடியாமல் இருப்பதானது இலங்கை ஆட்சியின் பைத்தியக்காரத்தனமாகும்.

தென்னிலங்கையின் பைத்தியக்காரத்தனம் ஒரு மாதிரியென்றால், தமிழ்ச் சூழலில் வேறுவிதமான பைத்திக்காரத்தனம் மேலோங்கியிருக்கின்றது. அதாவது, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசுகின்றவர்களை தமிழ்த் தேசிய விரோதிகளாகக் காண்பிக்க முற்படும் போக்கொன்று தமிழ்ச் சூழலில் காணப்படுகின்றது. ஆனால், இவ்வாறு 13 எதிர்ப்பில் ஈடுபடும் குழுக்கள் எவரிடமும் மாற்று வழிகள் தொடர்பில் எந்தவொரு நிலைப்பாடும் இல்லை.

13ஆவது திருத்தச் சட்டத்தையும் தாண்டி பயணிப்பதுதான் தேவையானது. அதனை நோக்கித்தான் நாம் முன்னேற வேண்டும். ஆனால், எவ்வாறு? இருக்கின்ற ஒன்றை உச்சபட்சமாகப் பயன்படுத்திக் கொண்டு முன்னோக்கி நகர முடியும். ஆனால், அதனையும் சிங்கள ஆளும் வர்க்கம் தடுக்கும் போதுதான், நாம் அதிலிருந்து அடுத்த கட்டத்திற்கான கோரிக்கைகள் தொடர்பில் சிந்திக்க முடியும்.

# தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒட்சிசன் தொகுதி இன்று திறப்பு!

*யாழ்ப்பாணம், பெப். 23*

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் புற்று நோய்க்கு சிகிச்சை பெறுவோருக்கு ஒட்சிசன் சுவாசம் வழங்கும் பொருட்டு ஒட்சிசன் தொகுதி ஒரு கோடியே 90 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்க திறந்து வைக்கப்படவுள்ளது.

லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி 1 இன் முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் ஆர். எல். ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் மருத்துவர் அனோமா விஜயசிங்க, சிறப்பு விருந்தினராக முன்னாள் சர்வதேச பணிப்பாளர் சுனில் வட்டவலவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

2021 - 2022ஆம் ஆண்டுக்கான லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் ஆர். எல். ராஜ்குமாரின் முயற்சியால் லயன்ஸ் கழக பெண்கள் அணியின் தலைவி லயன் மரியன் ராஜ்குமாரின் ஒழுங்கமைப்பில் அனைத்து லயன்ஸ் கழக உறுப்பினர்களிடமிருந்தும் சர்வதேச லயன்ஸ் கழகத்திடமிருந்தும் பெறப்பட்ட நிதியிலேயே இந்த ஒட்சிசன் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் தாய்மொழி நாள் சிறப்பு நிகழ்வுகள்!





*யாழ்ப்பாணம், பெப். 23*

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னெடுத்த உலகத் தாய்மொழி நாள் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பேராதனை பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன் கலந்து கொண்டு மொழி கற்றலின் அவசியம் குறித்து பேருரை ஆற்றினார்.

நிகழ்வில் விரிவுரையாளர் வே. சேந்தன் பேருரைக்கான அறிமுக உரையை ஆற்றினார் . உலகத் தாய்மொழி நாள் தொடர்பாக ஆசிரிய மாணவர்களின் உரை, கவிதை மற்றும் பாடல்கள் என்பனவும் ஆற்றுகை செய்யப்பட்டன.

(ஐ)

# நயினாதீவு அம்மன் ஆலயத்தில் அருங்காட்சியகம் திறந்து வைப்பு



*யாழ்ப்பாணம், பெப். 23*


வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தின் மீள்புனர்நிர்மாணம் செய்யப்பட்ட அருங்காட்சியகம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஆலயத்தின் அருகாமையிலுள்ள மணிமண்டபத்தில் ஆலயத்தின் தலைவர் சிறீ நாகராஜ சண்முகம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அருங்காட்சியகத்தில் வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் தொண்டுகள் ஆற்றிய சமயத் தலைவர்கள், நாகபூசணி அம்மனின் தொல்லியல் சாசனங்கள் அடங்கிய நூதன சாதனங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 23 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 11
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
திடீர் செலவுகளால் நெருக்கடி ஏற்படும். குடும்பத்தினர் ஒருவரின் எதிர்பார்ப்பை நிறைவேறும். உறவினருக்காக அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தில் சலசலப்பு தோன்றி மறையும்.

**இடபம்**
நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். உறவினர் உதவியால் முயற்சி ஒன்று நிறைவேறும். உத்தியோகத்தில் ஏற்பட்ட சங்கடம் நீங்கும். லாபம் அதிகரிக்கும். நிதி நிலை உயரும்.

**மிதுனம்**
புதிய தொழில் தொடங் குவது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். பிறர் உதவியுடன் நேற்றைய பிரச்னை ஒன்றிற்கு தீர்வு காண்பீர்கள். உங்களது செயலால் குடும்பத்தில் நிம்மதி ஏற்படும்.

**கடகம்**
நேற்று இருந்து வந்த நெருக்கடி விலகும். குடும்பத்தில் ஒருவரின் விருப்பம் நிறைவேறும். குழப்பங்கள் விலகும். திட்டமிட்டு செயல்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**சிம்மம்**
செயல்களில் இழுபறி உண்டாகும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் தடுமாறும். பகைவர்களின் கைமேலோங்கும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் தடை உண்டாகும்.

**கன்னி**
குடும்பத்தில் இருந்த பிரச்னை விலகும தம்பதிகளுக்குள் ஏற்பட்ட சங்கடம் நீங்கும். வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சி காண்பீர். பிறரால் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**துலாம்**
எதிர்ப்பு விலகும். உடல் நிலையில் ஏற்பட்ட சங்கடம் மறைந்து உற்சாகமுடன் செயல்படுவீர். தன்னம் பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருட்சிகம்**
பூர்வீக சொத்து பற்றிய பேச்சு எழும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு உறவினர் ஒருவரால் நல்ல தகவல் வரும். பெற்றோர் ஆதரவுடன் நீங்கள் எண்ணியது நிறைவேறும்.

**தனுசு**
தாய்வழி உறவுகளால் சில சங்கடம் ஏற்படும். மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.

**மகரம்**
நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். யோகமான நாள். பொதுநலத்துடன் ஒரு பணியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும்.

**கும்பம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர். இருக்கும் பணத்தை வைத்து நெருக்கடியை சரி செய்வீர்கள். தைரியமாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**மீனம்**
புதிய சிந்தனை மேலோங்கும். எதிர்காலம் குறித்த எண்ணத்துடன் இன்று செயல்படுவீர்கள். குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் போவார்கள். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

# போராட்டம் நடத்திய அண்ணாமலை உட்பட 3 ஆயிரம் பா. ஜ. கவினர் கைது!

சென்னை, பெப். 23

இராணுவ சிப்பாய் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக பா. ஜ. க. சார்பில் அனுமதியின்றி போராட்டம் நடத்தியதற்கு தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை உள்பட 3 ஆயிரம் பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரியில் அடித்துக் கொல்லப்பட்ட இராணுவ சிப்பாய் விவகாரத்தை கண்டித்து தமிழக பா. ஜ. க. சார்பில் நேற்று உண்ணாவிரத போராட்டம் மற்றும் மெழுகுவர்த்தி ஏந்திய பேரணி நடைபெற்றது.

சட்ட விரோதமாக கூடுதல், பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் கூட்டம் சேர்த்தல், மாநகர பொலிஸ் சட்டம் உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் திருவல்லிக்கேணி பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை, துணைத்தலைவர் கரு.நாகராஜன், பா. ஜ. க. நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட சுமார் 3 ஆயிரம் நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பேரணியை தொடர்ந்து இராணுவ வீரர் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக பா. ஜ. .க மாநில தலைவர் அண்ணாமலை, கிண்டி ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர். என். ரவியை சந்தித்து மனு அளித்தார். (ஐ)

# பன்னீர்செல்வம் ஒரு மாதத்தில் ஆளுநராக நியமிக்கப்படுவார்!

## அமைச்சர் உதயநிதி



ஈரோடு, பெப். 23

தமிழிசை, இல.கணேசன், சிபிஆர் வரிசையில், ஒரு மாதத்தில் ஓ. பன்னீர்செல்வம் ஏதாவது ஒரு மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படுவார் என அமைச்சர் உதயநிதி தெரிவித்தார்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் நேற்று பிரசாரத்தில் ஈடுபட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுத்துறை நிறுவனங்களை வழங்கியதால், அதானியின் சொத்து மதிப்பு, ரூ.6 இலட்சம் கோடியாக உயர்ந்து, உலகில் 2ஆவது பணக்காரர் என்ற இடத்தைப் பெற்றார். தற்போது, அவரின்முறைகேடு குறித்த தகவல் வந்ததால், 17 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டு விட்டார்.

மக்களால் தேர்வு பெற்று பழனிசாமி முதல்வராகவில்லை. அவர் தமிழக மக்களுக்கு உண்மையாக இருந்தது இல்லை. பா. ஜ. க. ஒரு கட்சி அல்ல. அது ஆளுநர்களுக்கு பயிற்சி கொடுக்கும் இடம். அங்கு பயிற்சி பெற்றவர்கள் ஆளுநராகிவிடுவார்கள். தமிழிசை, இல. கணேசன், சி. பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஆளுநராகி விட்டனர். இந்த வரிசையில், ஒரு மாதத்துககுள் ஓ.பன்னீர்செல்வம் ஏதாவது ஒருமாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படுவார் - என்றார். (ஐ)

# தமிழில் பேசும்போது பிறமொழி கலக்காதீர்கள்!

## பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ்

சென்னை, பெப். 23

தமிழ் பேசும்போது பிறமொழி கலந்து பேசாதீர்கள். உங்கள் வீட்டில் இருந்து தமிழ் பேசும் பயணம் தொடங்கட்டும் - என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழைத்தேடி என்ற கோஷத்துடன் அவர் நேற்றுமுன்தினம் பரப்புரை பயணத்தை தொடங்கினார். பரப்புரை பயணம் செல்லும் வழியில் மறைமலைநகரில் நேற்று முன்தினம் இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் பேசிய அவர், குடும்பத்தில் உள்ள குழந்தைகளுடன் தமிழில் உரையாடுங்கள். இப்போது அம்மா என்ற வார்த்தையை யாரும் சொல்வது கிடையாது. மம்மி என்று சொல்கின்றனர்.

நான் சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி செல்லும் வழியில் எங்கு பார்த்தாலும் விளம்பர பலகையில் தமிழ் எழுத்து இல்லை, நாம் லண்டனில் வாழ்கிறோமா என்று கோபம் வருகிறது. பிறந்த நாளன்று மரக்கன்று நட்டால் நான் உங்களை வாழ்த்துவேன். நம்முடைய பாட்டன், பூட்டன்கள் ஹலோ என்று கூறியதில்லை, இப்போது ஹலோ எங்கிருந்து வந்தது. நாம் 10 வார்த்தை பேசும்போது 9 வார்த்தை பிறமொழி கலந்து பேசுகிறோம், ஒரு வார்த்தை அதுவும் அரைகுறை தமிழில் பேசுகிறோம், அதுவும் கூட நெல்லை, கொங்கு தமிழ் இருந்தாலும் பரவாயில்லை ஆனால் அதுவும் இல்லை நான் இன்று பிறமொழி கலந்து 3 முறை பேசி தவறு செய்துள்ளேன் அதற்கு நானே ரூ.1000 தண்டம் விதித்து கொண்டேன்.

பெண் குழந்தைகள் பெண் தெய்வம் என்று சொல்வேன் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் வையுங்கள் தமிழுக்காக பல போராட்டங்களை செய்து விட்டோம். அண்ணா சாலையில் பிறமொழி மீது கறுப்பு மை பூசி போராட்டம் செய்துள்ளேன், நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தால் தமிழை காக்க முடியும் அரசுக்கும் அழுத்தம் கொடுத்தால் அரசும் செய்யும்.

தமிழ் பேசும்போது பிறமொழி கலந்து பேசாதீர்கள். உங்கள் வீட்டில் இருந்து தமிழ் பேசும் பயணம் தொடங்கட்டும் இந்த பயணம் வெற்றி பெற நீங்கள் அனைவரும் என்னை வாழ்த்த வேண்டும் - என்றார். (ஐ)

# பன்னீர், சசிகலா, தினகரன் தவிர யார் வந்தாலும் ஏற்றுக்கொள்வோம்!

சென்னை, பெப். 23

ஓ. பன்னீர்செல்வம் களத்திலேயே இல்லை. அவர் பின்னால் இனிமேல் யாரும் இருக்கமாட்டார்கள். அ. தி. மு. கவுக்கு ஓ. பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் இவர்களை தவிர யார் வந்தாலும் அவர்களை அரவணைத்து ஏற்றுக் கொள்வோம் - என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

நேற்ற அவர் அளித்த நேர்காணலில்,

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் ‘விடியா அரசு ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் பணத்தை வாரி இரைக்கிறார்கள். வீட்டுக்கு வீடு குக்கர், கொலுசு வழங்கப்படுகிறது. குறுக்கு வழிகளில் தேர்தலை எதிர்நோக்கி வருகிறார்கள்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. பொலிஸ், இராணுவத்தினர், பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. என்னை பார்த்த பெண்மணி ஒருவர் தி. மு. கவினர் தேர்தலுக்காக பணத்தை வாரி வாரி இறைக்கிறார்கள். நீங்கள் கவலைப்பட வேண்டாம் எங்கள் வாக்கு உங்களுக்குதான் என்கிறார். மக்கள் மத்தியில் இரட்டை இலைக்கு வரவேற்பு உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# தேர்தலை நிறுத்தும் அரசின் திட்டத்தை முறியடிக்குமாறு தூதரகங்களுக்கு கடிதம்

## அனுப்பியது சுதந்திர மக்கள் கூட்டணி

கொழும்பு, பெப். 23

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தாமதப்படுத்தப்படுவது தொடர்பில் தெளிவுபடுத்தி நாட்டிலுள்ள அனைத்து தூதரகங்களுக்கும் சுதந்திர மக்கள் கூட்டணி கடிதம் அனுப்பியுள்ளது.

இலங்கையில் எந்தவொரு தேர்தலை நடத்துவதற்குமான உரிய காலப்பகுதி, அரசியலமைப்பு ,ஏனைய சட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் அவற்றை கடைப்பிடிப்பது கட்டாயமானது என்பதுடன், அவற்றின் உள்ளடக்கத்தை மாற்றுவதற்கோ அல்லது தமது விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுவதற்கோ எவருக்கும் இயலுமை கிடையாது எனவும் சுதந்திர மக்கள் கூட்டணி கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

வரலாற்றில் முதற்தடவையாக நாட்டில் நிதியில்லை எனும் காரணத்தைக் கூறி தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இந்த தீர்மானத்தின் பெறுபேறுகள் எதிர்காலத்தில் தெரியவரும் எனவும் சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தங்களின் நாடுகளை தெளிவுபடுத்தி, இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுதந்திர மக்கள் கூட்டணி , வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரியுள்ளது.

திலங்க சுமதிபால, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, தயாசிறி ஜயசேகர, அநுரபிரியதர்சன யாப்பா, கலாநிதி நாலக்க கொடஹேவா, அசங்க நவரத்ன, கலாநிதி ஜீ. வீரசிங்க ஆகியோர் குறித்த கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர். (அ)

# ரணிலுக்குத் தேர்தல் ஆணைக்குழு பெரும் நிவாரணம் வழங்கியுள்ளது

## இந்திய ஊடகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 23

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தல் ஆணைக்குழு, பாரிய நிவாரணம் வழங்கியுள்ளதாக இந்திய செய்தித்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, திட்டமிட்ட திகதியில் நடத்த இயலாத நிலை உள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்த விடயம் தொடர்பிலேயே இந்திய செய்தித்தளம் தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

இது, சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளுக்கு இணங்க பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூடுதல் அவகாசத்தை அளித்துள்ளதாக அந்த செய்தித்தளம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி படுதோல்வி அடையும் என்பது பொதுவான கருத்தாகும்.

அத்தகைய தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, ஜனாதிபதியின் நம்பகத்தன்மைக்கு பாரிய சிக்கல் ஏற்படும்.

அத்துடன், நாட்டில் பொது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில், கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை அமுல்படுத்துவது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு இன்னும் கடினமாக இருக்கும் என்றும் இந்திய செய்தித்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை தொடர்ந்தும் பெற முனைப்பு

கொழும்பு, பெப். 23

நாட்டிற்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை தொடர்ந்தும் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறிகாட்டிகளுக்கு அமைவாகவே நாட்டின் அரச நிறுவாகம் இடம்பெறுகிறது. இதற்கு அப்பால் அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படமாட்டாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், நாடு இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது அரசாங்கம் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு மதிப்பளித்து அவதானமாகவும் பொறுப்புடனும் செயற்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# மரக்கறிகளின் விலை மேலும் குறைவடையும்

கொழும்பு, பெப். 23

மரக்கறி விலை வீழ்ச்சியினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

கெப்பிட்டிபொல மற்றும் நுவரெலியா பொருளாதார நிலையங்களில் ஒரு கிலோ போஞ்சியின் மொத்த விற்பனை விலை 200 ரூபாவாக குறைந்துள்ளது.

மெனிங் சந்தையில் பீன்ஸ் மொத்த விற்பனை விலை ஒரு கிலோகிராம் 330 முதல் 360 ரூபா என வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஒரு கிலோகிராம் கரட்டின் மொத்த விலை 150 ரூபாவுக்கும் குறைவாக பதிவானதுடன், ஒரு கிலோகிராம் பூசணிக்காய் மொத்த விற்பனை விலையும் 70 ரூபாவாக குறைந்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலையும் 160 ரூபாவுக்கும் குறைவாகவே காணப்பட்டதுடன், உள்ளூர் உருளைக்கிழங்குகள் 200 முதல் 240 ரூபா வரையில் மனிங் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

# தேர்தலை நடத்த கோரி ஆணைக்குழுவுக்கு பணம் அனுப்பி வைத்துள்ள வாக்காளர்கள்



கொழும்பு, பெப். 23

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான பணத்தை வழங்கும் பொருட்டு பாதுக்க தபால் நிலையத்தின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு காசுக்கட்டளை அனுப்பும் செயற்பாடு நேற்று பாதுக்க தபால் நிலையத்தில் இடம்பெற்றது.

பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் குழு ஒன்று பாதுக்க தபால் நிலையத்துக்குச் சென்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரின் பெயருக்கு நூறு ரூபாயிலிருந்து ஐநூறு ரூபா வரை காசுக்கட்டளை மூலம் பணம் அனுப்பி வைக்கப்பட்டது.

அரசியலமைப்பு ரீதியாக தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமை என்பதால் தேர்தலை நடத்தி மக்களின் உரிமைகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும், அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்திடம் பணம் இல்லை எனவும் இவர்கள் தெரிவித்தனர்.

எனவே, உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு, தாம் உழைத்த பணத்தை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைப்பதாக அவர்கள் கூறினர். (அ)

# இந்தியாவிலிருந்து அடுத்த வாரம் 2 மில்லியன் முட்டைகள் இறக்குமதி

கொழும்பு, பெப். 23

இந்தியாவில் இருந்து அடுத்தவாரம் 2 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் சமீலா இந்தமல்கொட தெரிவித்தார்.

குறித்த முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கையின் கால்நடை வள பிரிவின் அனுமதி கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஜி - 20 நிதியமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கைக்கான உதவி குறித்தும் பேச்சு

கொழும்பு, பெப். 23

இலங்கை உட்பட்ட நாடுகளின் பொருளாதாரங்களில் கடன் பிரச்சினைகள், கிரிப்டோ நாணயங்கள் மற்றும் உலகளாவிய பணவீக்க அழுத்தங்கள் குறித்து ஜி-20 அமைப்பின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் சந்திப்பு ஒன்றில் விவாதிப்பார்கள் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜி-20 அமைப்பின் தலைமையை இந்தியா ஏற்றதும் இடம்பெறும் முக்கிய நிகழ்வு இதுவாகும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, கடந்த வருடம் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமான நிலையில், இந்த சந்திப்பு நிகழ்ச்சி நிரலில் அதிக மாக உக்ரைன் தொடர்பாக பேசப்படும்.

நெருக்கடியான பொருளாதாரங்களுக்கான கடன் மறுசீரமைப்பைத் தடுப்பது மற்றும் உக்ரைனுக்கான உதவியை அதிகரிப்பது ஆகியவை கூட்டத்தில் முக்கியத்துவம் பெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

அமெரிக்க திறைசேரியின் செயலர் ஜேனட் யெல்லனும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கான கடன் நிவாரணத்தை 'விரைவாக வழங்க' சீனாவை இந்த சந்திப்பின்போது வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய இறையாண்மைக் கடன்கொடுநரான சீனா உட்பட கடன் கொடுநர்களிடம், கடன்களை பெரிய அளவில் குறைக்குமாறு கேட்டுக்கொள்வதன் மூலம் கடனாளி நாடுகளுக்கு உதவ ஜி-20 நாடுகளுக்கு இந்தியா ஒரு முன்மொழிவைத் தயாரித்து வருவதாக ரொய்ட்டர்ஸ் கடந்த வாரம் தெரிவித்திருந்தது. (அ)

# ராஜபக்ஷ குடும்பம் ஒருபோதும் திருட்டு எதுவும் செய்யவில்லை!

## மோசடியாளர்களை தண்டிக்கும் சட்டத்தை உருவாக்க கோருகிறது பொதுஜன பெரமுன



கொழும்பு, பெப். 23

**இந்த நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பதவி வகித்த அனைத்து முன்னாள் ஜனாதிபதிகள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வைத்துள்ள சொத்துக்களை ஆய்வு செய்து, மோசடி செய்திருந்தால் தண்டிக்கக்கூடிய விசேட சட்டமொன்றை உருவாக்குங்கள் என பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அதற்காக ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பதாக அவர் கூறினார்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் திருட்டுக்கள் எதுவும் செய்யவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது என்றும் சாகர குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனிமேல் இதுபோன்ற ஊழல் தடுப்புச் சட்டங்களைக் கொண்டு வருவதில் தனது கட்சி முழு முயற்சி எடுக்கும்.

இந்த நாட்டில் 30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை நாளுக்கு நாள் அபிவிருத்தி செய்த ராஜபக்ஷவுக்கு எதிராகச் சொல்வதற்கு வேறு ஒன்றும் இல்லாததால், ராஜபக்ஷவை தோற்கடிக்க ராஜபக்ஷ திருடியதாகக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

2015இல் ராஜபக்ஷ திருடியதாகக் கூறியதை நாட்டு மக்களும் ஓரளவு நம்பினார்கள். அதனால் திருட்டைப் பிடிக்க 2015 இல் மறுபக்கம் வாக்களித்தனர். ராஜபக்ஷக்கள் தோற்கடிக்கப்பட்டனர். புதிய அரசாங்கம் பல்வேறு வழக்கறிஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியது. ஸ்கொட்லாந்து யார்ட் மற்றும் சி.ஐ.ஏ ஆகிய இரண்டின் ஆதரவையும் பெற்றது. இந்த நாட்டில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பல்வேறு தேடல்கள் நடத்தப்பட்டன. இலங்கையில் உள்ள அனைத்து கணக்குகளையும் சரி பார்த்தனர். ஆனால் இறுதியில் ராஜபக்ஷ திருட்டு எதுவும் செய்யவில்லை என்பது நிரூபணமானது.

இறுதியில் எமது கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்குகளில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதிலும், ஒரு குற்றச்சாட்டையும் நிரூபிக்க முடியவில்லை.

நாட்டை வளர்த்த, நாட்டுக்காக உழைத்த தலைவர்கள் திருடர்கள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். இந்த லேபிள் உண்மையில் திருடியவர்களால் கொண்டு வரப்படுகிறது. அல்லது இந்த நாட்டில் சொத்துக்களை அழித்தவர்கள், பஸ்களை கொளுத்தியவர்கள், மின் மாற்றிகளை தகர்த்தவர்கள் தமது பொய்களை மறைப்பதற்காக நாட்டை வளர்த்த தலைவர்களைத் திருடர்கள் என முத்திரை குத்துகிறார்கள். நம் நாட்டில் இது புதிதல்ல. அநகாரிக தர்மபால கூட திருடன் என்று அழைக்கப்பட்டார். நாட்டை விட்டு வெளியேறினார். அவர் இறந்த பிறகு தேசிய வீரராகக் கருதப்படுகிறார்.

உலகில் தலைவர்கள் குறைவு. நாட்டை ஆளக்கூடிய தலைவர்கள் எங்கள் கட்சிக்கு உள்ளனர். இது எங்களின் பெருமை.

எமது தலைவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொய்யான திருடர்கள் குற்றச்சாட்டினால், இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் அனைத்து அரச தலைவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் சோதனையிடவும், உள்நாடு, வெளியூர், மற்றும் எந்தவொரு சொத்துக்களையும் கைப்பற்றும் வகையிலான விசேட சட்டமொன்றை உருவாக்குவதற்கு ஒரு கட்சியாக தீர்மானித்தோம். அவர்களை தண்டிக்க அதனை நிறைவேற்றுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம். அந்த நோக்கத்திற்காக, ஊழலுக்கு எதிரான சட்டங்களை கொண்டு வருவதற்கு முன்முயற்சி எடுக்கும் கட்சியாக நாங்கள் செயற்படுகின்றோம் - என்றார்.

(அ)

# 21,000 கடலட்டைகளுடன் சாட்டியில் 12 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் சாட்டி கடற்கரையை அண்மித்த பகுதிகளில், 21 ஆயிரத்து 175 கடலட்டைகளுடன் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 12 பேரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய அடுத்து, 12 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளைக் கொண்டு செல்வதாக பொலிஸாருக்கு கிடைக்க இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், அப்பகுதிகளில் சோதனைகளை முன்னெடுத்தவேளை, உரிய அனுமதிகள் இன்றி கடலட்டைகளை கடத்திச் சென்ற குற்றத்தில் 11 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் அவர்களிடம் இருந்து 9 ஆயிரத்து 875 கடலட்டைகளை மீட்டு இருந்தனர்.

அதேவேளை, மற்றுமொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 11 ஆயிரத்து 300 கடலட்டைகளையும் மீட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்றில் அவர்களை முற்படுத்தியபோது, மன்று அவர்களை பிணையில் செல்ல அனுமதித்தது. (அ)

# 26,635 கஞ்சா செடிகள் சிக்கின!

கொழும்பு, பெப். 23

பனாமுர பொலிஸ்நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, பனாமுர தொடம்வத்த பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 26,635 கஞ்சா செடிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் இதிகாட்டிய மற்றும் முள்எட்டியாவல பிரதேசத்தைச் சேர்ந்த 31 மற்றும் 50 வயதானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# 40 இ.போ.ச. புதிய பஸ்கள் போக்குவரத்து சேவையில்

கொழும்பு, பெப். 23

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 40 பஸ்களை தேசிய போக்குவரத்து சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தில் 165 பஸ்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

குறித்த பஸ்களில் 40 பஸ்கள் இவ்வாறு பொது போக்குவரத்து சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், கிராமப் புறங்களில் நிலவும் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த வருடத்துக்குள் 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் நியமன விடயத்தில் முறைகேடு!

## சர்வேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 23

வடக்கு மாகாண சுகாதார நிர்வாக விடயத்தில் உயர் பொறுப்புக்கான பதவிக்கு சட்டவிரோதமானதும், முறைகோடானதுமான நியமனம் நடைபெற்றுள்ளது என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளராக அண்மையில் திலிப் லியானகே நியமிக்கப்பட்டார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் இருந்துள்ளார். அவரது காலம் முடிவடைந்த பின்னர் அந்த இடத்துக்கு அடுத்ததாக பிரதிப் பணிப்பாளராக வைத்திய கலாநிதி நந்தகுமார் சுகாதார நிர்வாக சேவையாளர் பட்டியலில் முன்னணியிலுள்ளார்.

அவ்வாறான தகுதியும், அனுபவமும் உடைய ஒருவர் இருக்கத்தக்கதாக இந்தப் பட்டியலில் 68 ஆவது இடத்தில் இருக்கும் திலீப் லியானகே நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட தரப் பட்டியலில் முதலாவதாகவும், கேதீஸ்வரனுக்கு அடுத்ததாகவும் இருப்பவர் நந்தகுமார்.

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் பதில் பணிப்பாளராக குறிப்பிட்ட காலம் கடமையாற்றி அனுபவம் வாய்ந்தவர்.

இந்த நியமனத்தை செய்யும் பொறுப்பும் கடமையும் மாகாண சபைக்குரிய அதிகாரம் ஆகும்.

ஒரு மாகாணத் திணைக்கள ஆணையாளரையோ ஏனைய வைத்தியர்களையோ நியமித்தல், இடம் மாற்றம் செய்தல் என்பன மாகாண சபைக்குரியது.

மாகாண சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி இல்லாத பட்சத்தில் அந்த அதிகாரமும் பொறுப்பும் ஆளுநருக்குரியதாகும்.

முறைகேடாக ஒருவர் அனுப்பப்படும்போது அவரை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆளுநரின் பொறுப்பும் கடமையும்.

இவ்வாறு இருக்கையில் முறைகோடான நியமனத்தை செய்தவர் ஆளுநர்.

நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இலங்கையில் எந்தப் பகுதியிலும் வேலை செய்யலாம். அதே போல் கல்வி நிர்வாக சேவை உட்பட பல சேவைகள் உண்டு.

மாகாணத்துக்கான தகுதி வாய்ந்த அதிகாரிகள் இல்லாதபோது அந்த மாகாணத்தின் மாகாண சபையின் அமைச்சர்கள், முதலமைச்சர் அவர்கள் இல்லாத பட்சத்தில் ஆளுநர் மத்திய அரசாங்கத்திடம் குறித்த பதவிக்கு ஆள் தேவையென எனக் கேட்கும்போது அவர்கள் விடுவிக்க முடியும். அவ்வாறு விடுவிக்கும் ஒருவரை ஏற்பதா இல்லையா என்பதை மாகாண சபை தீர்மானிக்கும்.

இன்று மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாகாண சபை இல்லாத காரணத்தினால் அது ஆளுநரின் பொறுப்பாக உள்ளது. மத்திய அரசாங்கம் ஒருவரை அனுப்பினாலும் அவருக்கு ஆளுநரின் நியமனக் கடிதம் இல்லாமல் அந்தப் பதவியை ஏற்க முடியாது.

இன்று லியானகே பதவியை ஏற்றாரெனில் ஆளுநரின் கடிதத்தை பெற்றாரா? இல்லையா? என்ற கேள்வி உள்ளது.

ஆளுநர் நியமனக் கடிதம் கொடுக்காமல் பொறுப்பேற்று இருக்க முடியாது. அவ்வாறாக கடிதம் கொடுக்கப்பட்டிருந்தால் ஆளுநர் தனது அதிகாரத்தை துஷ்டியோகம் செய்துள்ளார்.

மாகாணத்துக்குரிய திணைக்கள ஆணையாளர்களையும் ஏனைய முக்கிய அதிகாரிகளையும் நியமிக்கும் பொறுப்பு மாகாண சபைக்குரியதாக உள்ள போதும் இவரது நியமனம் சட்டவிரோதமானது.

ஆகவே முறைகேடானதும் சட்ட விரோதமானதுமான நியமனத்தை அடுத்து வரக்கூடிய வாரத்துக்குள் ஆளுநர் ரத்து செய்து இதற்குரிய சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு ரத்து செய்யத் தவறினால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் - என்றார். (அ)

# சர்வதேச நாணய நிதியத்தின் பதிலை துரிதப்படுத்த சர்வதேச ஆதரவு தேவை

## இலங்கைப் பிரதிநிதிகள் கோரிக்கை

கொழும்பு, பெப். 23

**நிதி மற்றும் உதவி தொடர்பில், சர்வதேச நாணய நிதியத்தின் பதிலை விரைவுபடுத்துவதற்கு இலங்கை சர்வதேச ஆதரவை நாடியுள்ளது.**

வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி, நேற்று முன்தினம் வெளியுறவு அமைச்சில் பாரிஸ் கிளப் உறுப்பினர் நாடுகளின் தூதுவர்கள் மற்றும் இந்திய தூதுவர் ஆகியோருக்கு விளக்கமளித்த போதே இதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சமரதுங்க ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து, இதன் போது இலங்கை தரப்பு, இராஜதந்திரிகளிடம் விளக்கமளித்தது.

நிதி மற்றும் ஆதரவு தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் விரைவான பதிலுக்காக இந்த முக்கியமான தருணத்தில் இலங்கைப் பிரதிநிதிகள் தமது வலியுறுத்தலை விடுத்துள்ளனர். (அ)

# தீ விபத்தில் எரிந்து நாசமான மருந்துகள்

கொழும்பு, பெப். 23

பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குளிர்சாதனப் பெட்டியில் இருந்த மருந்துகள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நேற்று முன் தினம் மாலை 5.45 மணியளவில் மருந்துப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கட்டடத்தில் புகை மூட்டத் தொடங்கியதையடுத்து, வைத்தியசாலை ஊழியர்கள் உடனடியாகச் செயற்பட்டு அம்பலாங்கொடை பொலிஸாருக்கு அறிவித்து தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர்.

பின்னர் காலி தீயணைப்பு பிரிவினரை வரவழைத்து தீயை அணைத்து பல மருந்துகளை காப்பாற்றியதாக அம்பலாங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினால் மருந்துகளுக்கு ஏற்பட்ட சேதம் இதுவரை கணக்கிடப்படவில்லை.

அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மைத்திரியின் மனு தொடர்பான தீர்ப்பு மார்ச் 1 வரை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 23

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கக்கோரி தமக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் நிராகரித்து அந்த வழக்குகளில் இருந்து தன்னை விடுவிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மைத்திரிபால சிறிசேன இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட இருந்த போதிலும் மேல்மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவை வெளியிடுவதை மார்ச் 1ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க போதிய புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தும் நடவடிக்கை எடுக்காததற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 108 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். (அ)

# ஜே.வி.பியினர் கணவரை கொன்றனர் அவர்களால் பாதிக்கப்பட்டவள் நான்!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்து



கொழும்பு, பெப். 23

தனது கணவர் விஜய குமாரதுங்கவை தமக்கும் பிள்ளைகளுக்கும் முன்னால் கொன்று குவித்த ஜே.வி.பியினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மத்துகம பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அன்றைய தினம் இங்கிலாந்து சென்றிருந்தமையால் தானும் இரண்டு பிள்ளைகளும் கஷ்டப்பட்டு உயிர் பிழைத்ததாகவும் தெரிவித்தார்.

அதனால் அவர்களை எனக்கு நன்றாக தெரியும். எனது நூற்றுக்கணக்கான நண்பர்கள் அவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்தர் கூறியது போல், எந்த மனிதனும் மாற முடியும். இப்போது இவர்கள் சரியான பாதைக்கு வந்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. அவர்களைப் பற்றி உறுதியாக தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள் மற்றவர்களைக் குற்றம் சாட்டுகிறார்கள். தாங்கள் மட்டும் தான் சரி, நல்லவர்கள், மற்றவர்கள் எல்லாம் தவறு என்று பாசாங்கு செய்கிறார்கள். ஊழலுக்கு எதிராக பேசினாலும், ஆட்சிக்கு வந்தால் ஊழலை எப்படி தடுப்பது என்று சொல்லவில்லை.

இது தொடர்பில் சரியான வேலைத்திட்டம் அவர்களிடம் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

ஊழலை எப்படி நிறுத்துவது என்பதை நாட்டுக்கு சொல்லுமாறு ஜே.வி.பி.க்கு நான் சவால் விடுகிறேன். எமது புதிய லங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்டுள்ள புத்தகத்தில் ஊழலை எவ்வாறு தடுப்பது என்ற வேலைத்திட்டம் உள்ளது. அமைச்சர்கள், மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் ஊழலைக் கட்டுப்படுத்துவதுடன் அரச சேவையில் ஊழலை ஒழிப்பதற்கும் சரியான வேலைத்திட்டம் எங்களிடம் உள்ளது-என்றார். (அ)

# கறுப்பு நிற ஆடைகளில் அரச வங்கி பணியாளர்கள்

கொழும்பு, பெப். 23

புதிய வரிச் சட்டத்துக்கு எதிராக ஹற்றனிலுள்ள பிரதான அரச வங்கிகளின் முகாமையாளர்கள் உள்ளிட்டவர்கள் நேற்று கறுப்பு நிற ஆடையணிந்து கடமைகளுக்கு சமூகமளித்திருந்தனர்.

குறித்த புதிய வரிச் சட்டத்துக்கு எதிராக நேற்று தொடக்கம் ஒரு வாரத்துக்கு தமது எதிர்ப்பை தெரிவித்து கறுப்பு வாரம் அனுஷ்டிக்கவுள்ளதாகவும் வங்கி முகாமையாளர்கள் தெரிவித்தனர். (அ)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மும்முரம்



கிளிநொச்சி, பெப். 23

ஜப்பான் மற்றும் அவுஸ்ரேலியா நாடுகளின் நிதியுதவியுடன் டாஸ் நிறுவனத்தினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணி மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் மக்களைக் குடியேற்ற முடியாத பகுதிகளை அடையாளம் காணப்பட்டு, வெடி பொருள் அச்சுறுத்தல் உள்ள பகுதிகளைப் பாதுகாப்பான பகுதிகளாக அடையாளப்படுத்தும் விதமாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏறத்தாள, 433 பேர்களுடன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அப்பணிக்கு மேலதிகமாக வெடிபொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் சம்பந்தமான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, அவர்களைப் பாதுகாப்புடன் இருக்கவும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

2010ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடியகற்றும் பணியை டாஸ் நிறுவனமானது வடமாகாணத்தில் முன்னெடுத்து வருகின்றது.

இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளான புணர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்குப் பெரிதும் உதவி புரிந்து வருகிறது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது 15.5 சதுர கிலோ மீற்றர் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசமாக அடையாளப்படுத்தியுள்ளது.

மேலும், குறித்த நிறுவனத்தினால் கையளிக்கப்பட்ட இடங்களாகக் கிளிநொச்சி பல்கலைக் கழக வளாகம், வயல் நிலங்கள், ஆற்றங்கரைகள், பள்ளிக்கூட வளாகம், கோயில், ஆனையிரவு உப்புவயல்கள், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மற்றும் கால்நடை மேய்ச்சல் நிலங்கள், போன்ற பகுதிகள் பாதுகாப்பாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முகமாலை, மணலாறு மற்றும் கொக்குத் தொடுவாய் பகுதியில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அவற்றில்

357 இடங்கள் முழுமையாகக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, மேலும் 13 இடங்களில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த நிறுவனம் தெரிவிக்கின்றது.

அத்தோடு, 26 இடங்களில் வெடிக்காத வெடிப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாகவும், 110,058 தனிநபர் கண்ணிவெடிகள், 254 கனரகவாகன கண்ணிவெடிகள், 26,508 வெடிக்காத பொருட்கள் மற்றும் 168,141 சிறிய ஆயுதங்களுக்கான பொருட்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனத்தின் கணக்கிடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# செல்போன் இல்லாமல் ரயிலில் 10 மணிநேரம் பைடனின் ரகசிய பயணம் சாத்தியமானது எப்படி?



சாரா ஸ்மித்

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உக்ரேனுக்கு ஒரு துணிச்சலான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.தினந் தோறும் தாக்குதல் நடக்கும் ஒரு போர்க் களத்திற்கு சென்ற ஜோ பைடனின் இந்த பயணம் நவீன காலத்தில் ‘அபூர்வமானது’ என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்பு ஈராக் மற்றும் ஆப்கானிஸ் தான் என போர் நடக்கும் பகுதிகளுக்கு அமெரிக்க அதிபர்கள் சென்றபோது பலமான அமெரிக்க ராணுவ ஆதரவுடன் சென்றனர்.

போலாந்தில் ஜோ பைடன் இருந்தபோது அவர் உக்ரேனுக்கு பயணம் மேற்கொள்வார் எனப் பத்திரிகையாளர்கள் ஊகித்திருந்தபோதும், பைடனின் பயணம் பலரையும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

போலாந்தில் உக்ரேன் மக்கள், அமெரிக்காவின் ஆதரவு குறித்து உரையாற்றியிருந்தார் பைடன் ஆனால் அவரின் பேச்சைக்காட்டிலும் சைரன் சத்தத்திற்கு மத்தியில் உக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியின் அருகில் அவர் இருந்தது வலுவான பல செய்திகளை சொல்கிறது.

“அது ஒரு ஆபத்தான பயணம் ஆனால் தனது கடமைகளைத் தீவிரமாக எடுத்து கொள்பவர் பைடன் என்பதை இந்த பயணம் காட்டுகிறது,” என வெள்ளை மாளிகையின் செய்தி இயக்குநர் கேட் பெடிங்ஃபீல்ட் தெரிவித்தார்.

## மொபைல் போன்கள் இல்லை

திங்களன்று மாலை அமெரிக்காவிலிருந்து போலாந்து தலைநகரான வார்சாவிற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார் பைடன். பயணத்தின் போது அவரின் திட்டம் என்ன என்பதில் இரு இடங்களில் நீண்ட நேரத்திற்கு எதுவும் குறிப்பிடாமல் இருந்தால் அவர் உக்ரேனுக்கு செல்லலாம் என் சந்தேகங்கள் எழுந்தன.

வெள்ளை மாளிகையில் தினந்தோறும் நடைபெறும் பத்திரிகையாளர்களின் சந்திப்பின்போது இதுகுறித்து தொடர் கேள்விகள் எழுப்பப்பட்டாலும் உக்ரேன் அதிபருடன் எந்த சந்திப்பும் இல்லை என்றும் வார்சாவை தவிர எங்கும் செல்ல திட்டம் இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டது.

கீய்விற்கு பயணம் மேற்கொள்ள வேண்டும் என ஒரு மாத காலமாக திட்டமிடப்பட்டு வந்தாலும் வெள்ளியன்று தான் இறுதிக்கட்ட முடிவு எடுக்கப்பட்டது.

இந்த பயணத்தில் பைடனுடன் ஒரு சிறிய குழு மட்டுமே சென்றது. ஒரு மருத்துவக் குழு மற்றும் சில பாதுகாப்பு அதிகாரிகள்.

இரண்டு பத்திரிகையாளர்கள் மட்டுமே அதிபருடன் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் பயணமும் ரகசியமாக வைக்கப்பட்டது. அவர்களின் மொபைல் போன்கள் எடுத்து கொள்ளப் பட்டது. பைடன் கீவ்விற்கு வந்த பிறகு தான் அதுகுறித்து அவர்கள் செய்தி வெளியிட அனுமதிக்கப்பட்டது.

பைடன் கீவ்விற்கு செல்வதற்கு சற்று முன்புதான் இந்த பயணம் குறித்து ரஷ்யாவுக்கு தெரிவிக்கப்பட்டது என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுவிலன் தெரிவித்தார்.

“தாக்குதல் நடைபெறுவதை தடுப்பதற்கான நோக்கத்தில் எங்களின் செய்தி ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது எத்தகைய செய்தி, அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்பதை விளக்க இயலாது” என அவர் தெரிவித்தார்.

## 10 மணிநேர ரயில் பயணம்

கீவ்விற்கு செல்ல பத்து மணிநேர ரயில் பயணத்தை மேற்கொண்டார் அதிபர் பைடன். அவர் உக்ரேனில் எளிதாக செல்லக்கூடிய பிற இடங்களுக்கு சென்றிருக்கலாம் ஆனால் அவர் கீவ்விற்கு செல்ல திட்டமிட்டார். இதன்மூலம் உக்ரேனுக்கு உதவுவதில் அமெரிக்காவுக்கு உள்ள உறுதி குறித்து ரஷ்யாவுக்கு காட்டப்படுகிறது.

பைடனின் ஊடக செயலர் கரின் ஜேன் பியரி, “பைடன் எப்போதெல்லாம் உரையாற்றுகிறாரோ அது அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல உலகத்தில் உள்ள அனைவருக்கும் தான்,” என தெரிவித்துள்ளார்.

மேலும், “குடியரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர் எத்தனை நாட்களுக்கு அமெரிக்கா உக்ரேனுக்கு ஆதரவு வழங்கும் எனக் கேட்டதற்கான பதில் இது,” என அவர் தெரிவித்தார்.

## பைடன் பேசியது என்ன?

உக்ரேனிய குடிமக்களைப் பாராட்டிய ஜோ பைடன், ராணுவ பயிற்சியில் எந்த அனுபவமும் இல்லாமல் இந்த மக்கள் அற்புதமாகப் போராடியதாகக் கூறினார்.’உக்ரேனியர்களை மீண்டும் ஒரு முறை நான் பாராட்டுகிறேன். சாதாரண மற்றும் கடின உழைப்பாளியாக அவர்கள் திகழ்கிறார்கள். ஒருபோதும் ராணுவ பயிற்சி பெறவில்லை. ஆனாலும் களத்தில் அவர்கள் முன்னோக்கிச் சென்று போராடிய விதம் சிறந்த வீரத்திற்கு குறைவானது அல்ல. இப்போது உலகம் முழுவதும் அவர்களை அறிந்துள்ளது,” என்று பைடன் கூறினார்.

உக்ரேனிய அதிபரை சந்தித்த பிறகு அவரும் ஜோ பைடனும் ஒரு தொலைக் காட்சி ஒளிபரப்பில் தோன்றி வெளியிட்ட கூட்டறிக்கையில், ‘ஜனநாயக உலகம்” இந்த ‘போரில்” வெற்றி பெற வேண்டும் என்று குறிப்பிட்டனர்.

உக்ரேனுக்கு தொடர்ந்து அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று பைடன் தெரிவித்தார்.

கடைசி வரை ரகசியம் காத்த இந்த பயணம் எதற்காக?

‘நியூயார்க் டைம்ஸ்’ செய்தியின்படி, போலந்து எல்லையில் மிகவும் ரகசியமான முறையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ரயில் மூலம் உக்ரேனுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

போலந்தில் இருந்து உக்ரேனின் தலைநகர் கிவ்வுக்கு பைடன் மேற்கொண்ட வருகை பாதுகாப்பு காரணங்களுக்காக மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டது. அதிபர் பைடன் தற்போது உக்ரேனை விட்டுப் புறப்பட்டு விட்டதாக தெரிய வந்துள்ளது. கடந்த சனிக்கிழமை, பைடன் தனது மனைவி ஜில்லுடன் ஒரு உணவகத்தில் இரவு உணவு சாப்பிட்டுவிட்டு அமைதியாக வாஷிங்டனில் இருந்து புறப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூயார்க் டைம்ஸ் தனது செய்தியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெள்ளை மாளிகை வெளியிட்ட அதிபரின் பயண நிரலின்படி அவர் திங்கள்கிழமை வாஷிங்டனில் தங்கியிருந்து மாலை வார்சாவுக்குச் செல்ல வேண்டும் என இருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டுக்கு முன்பு உக்ரேன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு படையெடுப்பைத் தொடங்கிய பிறகு அந்நாட்டுக்கு அமெரிக்க அதிபர் செய்யும் முதலாவது பயணம் இதுவாகும். முன்னதாக, போலந்து அதிபர் ஆண்ட்ரேஜ் டுடாவை சந்திக்க பைடன் உக்ரேனுக்கு அருகே உள்ள போலந்துக்கு சென்றிருந்தார்.

## வெள்ளை மாளிகை அறிக்கை


ஜோ பைடனின் பயணம் குறித்து அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ‘அதிபரின் கிவ் பயணம், உக்ரேனின் ஜனநாயகம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான எங்கள் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது,” என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் அதில், ‘உக்ரேன் பலவீனமாக இருப்பதாகவும், ஐரோப்பா பிளவுபட்டதாகவும் நினைத்து புடின் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்பு அந்நாட்டை தாக்கினார். எங்களை சோர்வடையச் செய்யலாம் என அவர் நினைத்தார். ஆனால் அவர் தவறு செய்தார்,” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.ஜோ பைடன் தமது மண்ணுக்கு வந்து சென்ற சில நிமிடங்களில் உக்ரேனிய அதிபர் ஸெலென்ஸ்கி தனது அதிகாரபூர்வ டெலி கிராம் கணக்கில் இருந்து, அமெரிக்க அதிபருடன் கைகுலுக்கும் படத்தை வெளியிட்டார். •



# தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்!

ஔவை அருள்




மனிதன் தன் சிந்தனைத் திறத்தால் புதியன கண்டு, கேட்டு, அமைத்துப் போற்றிடும் சிறந்த நாகரிகக் கூறாக தாய்மொழி உருவெடுக்கின்றது. எத்தனையோ தடைகளையும், சில காலங்களில் நேரும் காலத்தாழ்வு, பிற்போக்கு ஆகியவற்றையும் கடந்து தாய்மொழியை மாந்தன் தன் சிந்தனையால், உறவுத் தொடர்பால் எப்படியோ வளர்த்துக் காத்து வந்திருக்கிறான் என்பது வியப்பைத் தருவதாகும்.

மனித வாழ்வின் வளர்ச்சியோடு இணைவதாகவே இதனை எண்ண வேண்டும். மக்களின் அறிவையும், ஆற்றலையும், வளத்தையும், வறுமையையும், பழக்கத்தையும் அடிப்படைகளாகக் கொண்டு தாய்மொழியிலும், பிறமொழிகளிலும் புதிய சொற்கள் கலக்கின்றன.

அறிவு வளமிக்க மக்கள், பல்வேறு துறைகளில் ஈடுபட்டு உழைத்து, தம்முடைய தாய்மொழியில் அதிக எண்ணிக்கையில் சொற்களைப் பெருக்கினர். தாய்மொழியின் சொற்பொருள் ஈட்டமும், அந்நாட்டார் வாழ்நிலையை, வாணிக நிலையைச் சுட்டிக் காட்டுகின்றன என்று கூறலாம். பேச்சுமொழி இயற்கையாக அமைவது. எழுத்துமொழி அறிவார்வத்தால் அமைவது.

மக்கள் ஒருவரோடு ஒருவர் கூடிப் பழகித் தம் உணர்வுகளைப் பரிமாறி மகிழ்வதற்காகவே தாய்மொழியைப் பயன்படுத்துகின்றனர். பேசும் மக்களை விட்டுப் பிரித்துப் பார்த்தால், தாய்மொழி என்பது இல்லை என்பர். மக்களின் அறிவில் அவ்வப்போது தோன்றும் புதுமைகள் அனைத்தும் பேசும் மொழியில் படிந்துவிடுகின்றன.

ஒரு நாட்டு மக்களின் முன், விரிந்து பரந்த உலகப் பொருண்மைகள் பலவாக நிற்கின்றன. உலகத்தில் பலவகைப் பொருள்கள், அவற்றின் இயல்புகள், தன்மைகள், செயல்கள் உள்ளன. பேசும் மக்களோ தம் அறிவு ஆற்றல்களில் தனித்தனி வேறுபாடு உடையவர்கள். அந்தந்தக் கூட்டத்தார் - நாட்டார் - அவரவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் ஏற்ற அளவில் உலகத்துப் பொருள்களைத் தத்தம் மொழியால் உணர்த்த முற்பட்டார்கள். நுண்ணிய கருத்துகளை உணர்ந்து, சொற்களால் உணர்த்துவதற்குச் சில கூட்டத்தார்க்கு நெடுங்காலம் ஆகியிருக்கும். வேறு சிலர் குறுகிய காலத்திலேயே நுண்கருத்துகளை உணர்த்தத் தொடங்கியிருப்பர்.

அவரவர்களின் வாழ்வில் எவ்வெப்போது எந்தெந்தப் பொருள்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனவோ, அந்தந்தப் பொருள்களுக்குரிய சொற்கள் அவ்வப்போது உருவாகியிருக்கும்.

பிரெஞ்சு மொழியில் உள்ள பாராளுமன்றம் தொடர்பான பல சொற்கள் ஆங்கிலத்திலிருந்து பெறப்பட்டவை. ஏனெனில், பாராளுமன்றத்தை முதன்முதலில் உருவாக்கியவர் ஆங்கிலேயர். பிறகு பிறமொழியாளர் வந்து கலந்தபோது, புதிய அல்லது நெருங்கிய தொடர்பில்லாத பொருள்களுக்கும் கருத்துகளுக்கும் உரிய சொற்கள் வந்து புகுந்திருக்கும். பிறர் கலப்பின் காரணமாக அல்லாமல், இயல்பாகவே தோன்றிய புதிய கருத்துகளுக்கு, தாமே அவ்வப்போது சொற்களைப் படைத்துக் கொண்டனர்.

பிறமொழியினர் பயன்படுத்தும் சொற்களையும், பொருட்பெயர்களையும் தன் மொழியில் எடுத்துரைக்க முயல்வதும் மனித மனத்தின் விழைவாகும். இம்முயற்சியில் தாய்மொழி கைவரப் பெறாத போது, பிறமொழியை ஏற்கும் முறையில் மொழிக் கலப்பு நடைபெறும். மக்கள் எந்தெந்தத் துறைகளில் வளர்ச்சி எய்துகிறார்களோ அந்தந்தத் துறைகளில் பெற்ற வளர்ச்சிக்கெல்லாம் ‘போலச் செய்தல்’ என்னும் இந்தத் தனிப்பண்பே காரணமாகும்.

குழந்தைகள் ஒரு வயதிலிருந்தே சொற்களின் பொருள் புரிந்து எதிர்வினை ஆற்றத் தொடங்குவர். எனவே அப்போதே தெரிந்துகொண்ட மொழிதான் தாய்மொழியாகும். அடுத்து கற்கும் இரண்டாம் மொழியில் சொல் அமைவுகளும், வாக்கிய அமைப்புகளும், உருவாவது கண்கூடு. புலம்பெயர்ந்த தமிழர்களின் குடும்பங்களிலும், பெற்றோர் பேசும் தமிழிலிருந்து, மொழியைக் கற்றுக் கொள்ளும்போது, நம் பண்பாட்டு விழுமியங்களை விளங்கிக் கொள்கின்றனர்.

வங்க நாட்டில் வாழ்ந்தவர்கள், ‘நாங்கள் பேசுகிற மொழி, வங்க மொழி. பாகிஸ்தான் ஆட்சி செலுத்துகிற மொழி உருது மொழி. எனவே, உருது மொழியை ஆட்சி மொழியாக்கி எங்கள் மீது திணிக்காதே’ என்றார்கள். எல்லோரும் ஒருமையாக, ஒன்றுபட்ட இனமாக நின்று, ‘நாங்கள் மண்டியிட வேண்டுமானால் உங்களிடத்தில் வருகிறோம். ஆனால், எங்கள் அழுகைக்கும், கண்ணீருக்கும், புன்னகைக்கும் வேறு மொழி இருக்கிறது’ என்றார்கள். அப்படிக் கூறியபோதுதான் பாகிஸ்தான் மிரண்டது. மதம் காரணமாகத்தான் நாடே பிரிந்தது. மதம் நமக்கு பெரிதாக இருந்தபோதுகூட இவர்கள் என்ன மொழி பேசுகிறார்கள் என்று கேட்டார்கள்.

வங்கம்தான் அவர்களை இணைத்தது. ‘வங்க மொழிதான் எங்கள் ஆட்சி மொழி எங்கள் பேச்சு மொழி வங்கம்தான்’ என்றார்கள். ‘கையில் வைத்திருக்கும் வேத புத்தகத்தின் மொழி வேறாக இருந்தாலும் வங்கம்தான் எங்கள் தாய்மொழி’ என்றார்கள். அப்படி இருந்தபோது இளைஞர்கள்தான் இதை பெரிதாகப் பேசினார்கள். இளைஞர்களில் நால்வரை வங்கத்தில் சுட்டுவிட்டார்கள். அவர்கள் சுடப்பட்டதற்கு ஒரு பெரிய நினைவுச் சின்னம் டாக்கா நகரத்தில் அமைத்திருக்கிறார்கள்.

இப்படி இவர்கள் செய்த எழுச்சியாலும், புரட்சியாலும் ஐக்கிய நாடுகள் அவை, ‘எப்படி இந்த நாடு வந்தது, மொழியால்தானே வந்தது? எனவே, அவர்கள் இறந்த அந்த நாளை நினைவுபடுத்தி, தாய்மொழி நாள் என்று அறிவிக்கலாம்’ என்று முடிவெடுத்தது.

வாழ்கிற இடத்திலேயே பல்லாண்டுகள் இருந்தால், வாழ்கிற சூழல் எப்படி இருக்கிறதோ, அச்சூழலுக்கு ஏற்றபடி நம் மொழி, அமைந்துவிடுகிறது. இந்த மொழி எங்கே மூளையில் அமைகிறது? யார் இந்த குழந்தைக்கு அதிகமான ஒலிக்குறிப்புகளை அறிவிக்கிறார்கள் என்றால் காதுதான். மூன்றாவது மாதத்திலேயே குழந்தைக்குக் காது கேட்கத் தொடங்குகிறது. கருப்பையிலும் கூட ஒலியைக் கேட்கிற பழக்கம் குழந்தைக்கு உண்டாம்.

அதனால்தான் திருவள்ளுவர், ‘செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாந் தலை‘ என்றார். ‘எங்கள் தந்தை மொழிதான் எங்களுக்கு பெருமை தருகிறது’ என்று ஜெர்மானியர்கள் சொல்கிறார்கள். ஜெர்மானியர்கள் ‘தந்தை மொழி’ என்கிறார்கள் நாம் ‘தாய்மொழி’ என்கிறோம்.

நமக்கு வேண்டிய பொருளை, நலந்தருகிற பொருளை ‘தாயே’ என்று போற்றுவதால் அது தாய்மொழியாகிறது. நேற்று உலகத் தாய்மொழிநாள் என்று எண்ணுகிறபோது, நமக்கொரு பெருமிதம். உலக மொழிகளுக்கெல்லாம் எங்கள் மொழிதான் தாய் என்று சொல்லிக்கொள்வதில் மகிழ்ச்சியடையலாம். எனவே, தாய்மொழித் திருநாள் தாய் உணர்வு போல, தாயை காப்பதுபோல, குடும்பத்தை காப்பதுபோல, சூழலைக் காப்பதுபோல, நம்முடைய மூலத்தைக் காப்பது போல. எனவே, நாம், நம்முடைய வேரை மறக்ககூடாது.

தென்னமெரிக்காவில் உள்ள சிலி நாட்டின் தென்கோடியில் அந்நாட்டின் தொன் மக்களில் ஒரு குழுவினர் பேசி வந்த, ‘யாகன்’ என்னும் மொழியைப் பேசி வந்த, கடைசி நபர் (பெண்மணி), கிறித்தீனா கால்தெரோன் என்பார் தனது **93**-ஆவது வயதில் சென்ற ஆண்டு பிப்பிரவரி **16** அன்று இறந்துபோனார். அவருடன் அவர் பேசிய மொழியும் முற்றாக அழிந்துபோனது.

நல்ல செயலாக அவர் பேசியதிலிருந்து அவருடைய மகள் இலிதியா கோன்சாலேசு கால்தெரோன் சொற்களைத் தொகுத்து ஓர் அகராதி உருவாக்கி வந்துள்ளார். யாகன் மக்களின் சில பழக்கவழக்கங்கள் இன்றும் தொடர்கின்றது என்றாலும், அவர்களின் மொழி அழிந்துவிட்டது. மீட்டுருவாக்கலாம், எனினும் அது அவ்வளவு எளிதன்று. அப்பகுதி மக்கள் முதியவர்களை பாட்டி- ஆச்சி - ஆயா - அம்மாயி என்னும் பொருளில் எசுப்பானிய மொழிச்சொல்லான ‘அபுயெலா’ கால்தெரோன் என்றழைப்பர்.

உலகில் மக்கள் தாம் பேசும் தாய்மொழியைச் சார்ந்தே குழுக்களாக அணிசேர்கிறார்கள். அவ்வகையில் நம் தாய்மொழியான தமிழ்தான் நமக்குத் தமிழர்கள் என்ற அடையாளத்தைத் தந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் நம் தமிழ்மொழிக்கு இருக்கின்றதுபோல இலக்கண நூல் வளமையும் இலக்கிய நூல்களின் செழுமையும் ஏனைய மொழிகளுக்கு வாய்க்கவில்லை என்பதை ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்’ என்ற பாடல் வாயிலாகத் தேசியக் கவி பாரதியாரே வலியுறுத்தியுள்ளார்.

நாட்டை, ‘தாய்நாடு’ என்றும், மொழியை ‘தாய்மொழி’ என்றும் அழைப்பது வழக்கமாகும். ‘தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளும் நினைக்கத்தக்கன.

‘எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எப்போதும் தமிழ்’ என்ற நெறிக்கிணங்கத் தமிழ் நாடு அரசு காலத்தாலும் கருத்தாலும் தொன்மை வாய்ந்த தாய்மொழியை வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் முன்னணியில் நிற்கிறது.

மொழி என்பது வரலாற்று சான்றாக விளங்குவதால், தாய்மொழி காக்க பேச்சு மொழியாக மட்டுமின்றி, எழுத்தறிந்து ஏனைய இலக்கியமறிந்து, தொன்மையில் நின்று, பண்பாட்டுடன் தலைநிமிர்ந்து வாழ இத்திருநாளை நினைந்து போற்றுவோம் !

எனவே, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த மொழியாம் ஒப்பிலாத நம் தாய்மொழியை ஏற்றிப் போற்ற வேண்டும் என்று இந்த உலகத் தாய்மொழி நாளில் நாம் உறுதியேற்போம்.

பெப். 21 உலகத் தாய்மொழி நாள்.

# கல்முனை மாநகர சபை நிதி பிரிவில் பொதுமக்களின் வரிப்பணம் மோசடி!

## உடன் விசாரணை நடத்துமாறு கோரிக்கை



அம்பாறை, பெப். 23

கல்முனை மாநகர சபை நிதிப் பிரிவில், மக்களின் வரிப் பணம் மோசடி செய்யப்பட் டுள்ளதாக கண்டறியப்பட்டு, நிதிப் பிரிவில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட் டுள்ளனர் என அறிகிறேன். இன்னும் பல மக்களின் வரிப் பணமும் மோசடி செய்யப்பட் டுள்ளதா என்பதைக் கண்டறிய, மக்கள் கல்முனை மாநகர நிதிப் பிரிவில் தமது விசாரணைகளை மேற்கொள்வது பொருத்தமான தாக அமையும் என கல்முனை மாநகர சபை ஊழல்களுக்கு எதிராக குரலெழுப்பி வந்த, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனை அமைப்பாளருமான எம்.ஐ.எம் அப்துல் மனாப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கடந்த காலங்களில் இருந்த அதிகாரிகள், தொகுதி பாராளு மன்ற உறுப்பினர், சபையை ஆளும் கட்சியின் தலைவர் போன்றோரின் அனுசரணையு டன் ஊழலுக்கு துணை போன வர்களாக இருந்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு, கல் முனை மாநகரில் 100 மீற்றர் வீதிக்கு 75 வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டதாக தெரி வித்து இடம்பெற்ற ஊழல் அடங்கலாக திரும்பும் திசை களிலெல்லாம் ஊழல் நிறைந்தே காணப்படுகின்றது. கல்முனை ஆணையாளர், இவ் வாறான மோசடிக்காரர்களை அடையாளம் கண்டு, பணி இடைநிறுத்தம் செய்திருப்பது பாராட்டப்படவேண்டும்.

பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் செலுத்தப்படும் மக் களின் வரிப்பணம் கொள்ளை யர்களினதும் திருடர்களினதும் வயிற்றுக்குள் செல்ல அனு மதிக்க முடியாது. மக்களின் வரிப்பணம் மோசடி செய்யப் பட்டுள்ளதாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு, கல் முனை மாநகர நிதிப் பிரிவுக்கு, தமது வரி கொடுப்பனவுகள் சென்றடைந்துள்ளதா என்பது பற்றிய விசாரணைகளை மேற்கொள்வது பொருத்தமான தாக அமையும்-என்றார். (அ)

# சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய நடைமுறை அறிமுகம்

கொழும்பு, பெப். 23

இலங்கை சுற்றுலா துறையை ஊக்குவிப்பதற்காக பயண அட்டை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த பயண அட்டை அறிமுகம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் நடைபெற்றது.

இந்த அட்டையை வழங்கிய பின்னர், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய் யப்பட்ட சுற்றுலாத் துறையில் பல்வேறு சேவைகளை வழங்கு பவர்கள் சுற்றுலாப் பயணி களைக் கையாள்வதில் சிறப்புச் சலுகைகளைப் பெறுவார்கள்.

மேலும், இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கையைக் கணக்கிடுதல், தாங்கள் கொண்டு வரும் டொலர்களை வங்கியில் நேரடியாகப் பரிமாற்றம் செய்தல் போன்ற தரமான சேவைகளைப் பெற முடியும்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகள் இந்த அட்டை மூலம் இலங்கையில் பொருட்க ளையும் சேவைகளையும் பாது காப்பாகப் பெற முடியும். (அ)

# அரச மருத்துவமனைகளுக்கு டீசல் வழங்க ஜப்பான் 4.6 கோடி டொலர்கள் நன்கொடை



கொழும்பு, பெப். 23

நாடு முழுவதும் உள்ள அரச மருத்துவமனை களுக்கு டீசல் வழங்குவதற் காக ஜப்பானிய அரசாங் கம் 4. 6 கோடி டொலர் களை மனிதாபிமான நன்கொடை யாக வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஒப்பந் தம், கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத் தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னி லையில் நடைபெற்றது.

நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன மற்றும் ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத் திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு 2 கோடி லீற்றர் டீசலை வழங்கவுள்ளது. தற் போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் இலங் கையில் மருத்துவ சேவைகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்த மனிதாபிமான உதவி வழங் கப்பட்டுள்ளது.

கல்வி TV CHANNEL-1

**23.02.2023**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி TV CHANNEL - 2

**23.02.2023**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நன்னீர் தடாக மீன் வளர்ப்பு திருக்கோவிலில் ஊக்குவிப்பு



அம்பாறை, பெப். 23

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் வழிகாட்டலில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் நன்னீர் தடாக மீன் வளர்ப்புத் திட்டம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவிப் பிரதேச செயலர் க.சதிசேகரன் தலைமையில் 28000 மீன் குஞ்சுகள் விநாயகபுரம் -3 கிராம சேவகர் பிரிவில் வழங்கபட்டது.

இந் நிகழ்வில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா மற்றும் கிழக்கு மாகாண மீன்பிடி பிரிவின் மாவட்ட நீரியல் வள உத்தியோகத்தர் அ.ராஜிதன் மற்றும் திட்ட உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயனாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வானது திருக்கோவில் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் கைத்தொழில் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிந்திரனின் ஒழுங்குப்படுத்தலின் கீழ் இடம்பெற்றது.

## பாம்பு தீண்டி சிகிச்சை பெற்றுவந்தவர் மரணம்!

மட்டக்களப்பு, பெப். 23

மட்டக்களப்பு பகுதியொன்றில் பாம்பு தீண்டி சிகிச்சை பெற்றுவந்த நபரொருவர் கடந்த 20 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் தனது காணியில் கடந்த வியாழக்கிழமை வேலை செய்து கொண்டிருந்த போது பாம்பு தீண்டி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் ஓட்டமாவடி - சூடுபத்தின சேனையில் வசித்து வந்த சேகு இஸ்மாயில் முகம்மது உசனார் (வயது-61) என தெரிவிக்கப்பட்டது. (அ)

# அரச நெல் கொள்வனவு குறித்து திருமலையில் கலந்துரையாடல்



திருமலை, பெப். 23

அரச நெல் கொள்வனவு தொடர்பான விசேட கலந்துரையாடல், திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் பி. எச். என் .ஜயவிக்கிரம தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

அரச நெல் கொள்வனவு தொடர்பாக தற்பொழுது இரண்டு சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் மாவட்டத்தில் நெல் கொள்வனவு தொடர்பான பொறிமுறையை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பான விளக்கம் மாவட்ட செயலாளரால், பிரதேச செயலாளர் உள்ளிட்ட துறை சார் திணைக்களத் தலைவர்களுக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

2022/2023 பெரும் போகத்தில் கிடைக்கப்பெற்ற நெல்லை விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளுகின்ற வேலை திட்டத்தின் கீழ், பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறிய, நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் மூலமாக நெல் கொள்வனவு இடம்பெற இருக்கின்றது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எஸ். அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். சுதாகரன், மாவட்ட செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன், திணைக்களத் தலைவர்கள் மற்றும் துறை சார் உத்தியோத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

# கிழக்கில் 45 நாள்களுக்குள் 1,363 டெங்கு நோயாளர்கள்

## அவதானமாக இருக்கக் கோரிக்கை



மட்டக்களப்பு, பெப். 23

**கிழக்கு மாகாணத்தில் 45 நாள்களுக்குள் 1,363 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டு உள்ளதாக கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணரும் சமூக வைத்திய நிபுணருமான மருத்துவர் எஸ். அருள்குமரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் 780 டெங்கு நோயாளர்களும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 203 டெங்கு நோயாளர்களும், அக்கரைப்பற்றில் 148 நோயாளர்களும் அட்டாளைச்சேனையில் 118 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஏழு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 25 நோயாளர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 315 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில், திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 243 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 87 நோயாளர்களும், உப்புவெளி பகுதியில் 58 நோயாளர்களும், மூதூர் சுகாதார அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 24 டெங்கு நோயாளர்களும், கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 19 நோயாளர்களும், கிண்ணியாவில் 18 நோயாளர்களும், குச்சவெளியில் 16 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

ஆகவே, பொதுமக்கள் சுற்றுப்புற சூழல்களைச் சுத்தமாக வைத்திருப்பதுடன் டெங்கு நுளம்புகள் பரவும் விதத்தில் காணப்படும் பொருட்களை அகற்றவேண்டும்-என்றார். (அ)

# இளைஞனை பாராட்டிய கல்முனைப் பொலிஸார்



அம்பாறை, பெப். 23

வீதியில் கண்டெடுக்கப் பட்ட ஐந்து இலட்சம் ரூபாய் பணம், உரியவரிடம் ஒப்படைக் கப்பட்டதுடன் பணப்பையை கண்டெடுத்து ஒப்படைத்த இளைஞனை கல்முனை தலைமையக பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

இச்சம்பவம், கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட அரச வங்கிக்கு கடந்த திங்கட்கிழமை 35 இலட்சம் ரூபா பணத்தை, வியாபார நடவடிக்கைக்காக வைப்பிலிடுவ தற்கு வர்த்தகர் ஒருவர் சென்றிருக்கின்றார். வங்கிக்குள் சென்று குறித்த தொகையை வைப்பிலிடுவதற்கு தயாரான நிலையில், கொண்டு வந்திருந்த பணத்தொகையில் ரூபாய் ஐந்து இலட்சம் காணாமல்போயுள்ளதை அறிந்துள்ளார்.

இந்நிலையில், உரிய வங்கி மேலாளருக்கு அறிவித்துவிட்டு, வங்கியின் அருகில் இருந்த சி.சி.ரி.வி கமெரா காணொளிகளை அவதானித்தபோது, தவறவிடப்பட்ட பணத்தை ஒருவர் எடுத்துச் செல்வது அவதானிக்கப்பட்டது.

அதற்கமைய, நேற்று முன்தினம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு வழங்குவதற்காக சென்றபோது, பணத்தைக் கண்டெடுத்த கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இளைஞனும், பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு வருகை தந்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மேலும், ஐந்து இலட்சம் ரூபாய் பணத்தைத் தொலைத்த வரும் பொலிஸார் முன்னிலையில் தான் கொண்டுவந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்திருந்ததை அடுத்து, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல் புத்திகவின் வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் , கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ வாஹிட் முன்னிலையில் காணாமல்போன பணம், உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில், இளைஞர்கள் பொருளாதார பிரச்னை களுக்கு உள்ளாகி இருக்கும் நிலையில், மனிதாபிமானமும் தன்னம்பிக்கையும் உள்ள இவ்வாறான இளைஞர்களை நினைத்து பெருமை கொள்வதாக பொலிஸாரும் வர்த்தகரும் பாராட்டினர். (அ)

# பாடசாலை அதிபரை இடமாற்றலாகி செல்லவிடாமல் தடுத்தனர் பெற்றோர்

அம்பாறை, பெப். 23

இடமாற்றம் பெற்று செல்ல இருந்த அதிபரை வெளியேற விடாமல் தடுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் உள்ள காயான்மடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றிருக்கிறது.

அப்பாடசாலையின் அதிபர் வைரமுத்து சுந்தரநாதன் நேற்று முன்தினம் முதலைக்குடா மகா வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டு இருந்தார் .

அதனை முன்னிட்டு அவர் பாடசாலையில் இருந்து சிரேஷ்ட ஆசிரியரிடம் கடமை பொறுப்பை ஒப்படைத்து விட்டு வெளியேற முயற்சித்த பொழுது அங்குள்ள கல்விச் சமூகம் அவரை செல்லவிடாமல் தடுத்தது.

"எமக்கு சுந்தரநாதன் அதிபர் தான் தேவை. அவரை விடமாட்டோம்" என்று அந்த கல்விச் சமூகம் ஒரு சில மணி நேரம் பாடசாலை பிரதான வாயிலை மூடி ஆர்ப்பாட்டம் செய்தது.

இதனை அறிந்த மட்டக்களப்பு மேற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.மகேந்திர குமார் தலைமையிலான குழுவினர் ஸ்தலத்துக்கு விரைந்து பொதுமக்களோடு கலந்துரையாடினர்.

சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்ற அந்த கலந்துரையாடலில் விரைவில் ஒரு நிரந்தர அதிபரை நியமித்து தருவதாக உறுதி அளித்ததை அடுத்து ஆர்ப்பாட்டம் விலகிக் கொள்ளப்பட்டது.

அதன் பின்பு அதிபர் வை.சுந்தரநாதனை விடுவித்து புதிய பாடசாலைக்குச் செல்ல அனுமதித்தார்கள். (அ)

# மேற்கு நாடுகள்தான் போரை தொடக்கின!

## ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சாடல்
## போரின் ஓராண்டு நிறைவில் முக்கிய உரை



மொஸ்கோ, பெப். 23

**ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நாட்டுக்கு ஆற்றியுள்ள ஒரு நீண்ட உரையில், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணியைக் கடுமையாகச் சாடியிருக்கிறார். உக்ரைனில் போரை மேற்கு நாடுகளே தொடக்கின என்றும் இப்போது அதனை மேலும் விரிவாக்கி வருகின்றன எனவும் புடின் குற்றம் சாட்டியிருக்கிறார்.**

உக்ரைன் மீதான போரைத் தீவிரப்படுத்தும் விதமான அறிவுப்பு எதனையும் அவர் உரையில் விடுக்கவில்லை. உக்ரைன் போரை “போர்” என்று அழைப்பதை வழமை போன்றே தவிர்த்தார். விசேட படை நடவடிக்கை என்றே குறிப்பிட்டுப் பேசினார்.

உக்ரைனின் மீது அழுத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக நிதானமாகவும் மிகக் கவனமாகவும் படிப்படியாக நகர்வுகளைச் செய்வோம் என்றும் அவர் அறிவித்தார்.

வழக்கமாகப் பெப்ரவரி மாதங்களில் மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் அவர் உரையாற்றுவது வழக்கம்.

இந்த முறை உக்ரைன் படையெடுப்பின் ஓராண்டு நிறைவு நாளை ஒட்டி அவரது உரை அமைந்ததால் அது உலக அளவில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆயினும் உக்ரைன் போரைத் தீவிரப்படுத்தும் விதமான அறிவுப்பு எதனையும் அவர் தனது உரையில் விடுக்கவில்லை.

“நான் மீண்டும் சொல்கிறேன். அவர்களே போரைத் தொடங்கினர், நாங்கள் அதைத் தடுக்க எங்கள் சக்தியைப் பயன்படுத்தினோம்.

மேற்குலகின் இலக்கு வரம்பற்ற அதிகார சக்தியை விஸ்தரிப்பதே ஆகும்.உக்ரைனுக்குத் தங்களின் ஆதரவை வழங்குவதற்காக மேற்குலகம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு வளங்களை அள்ளிக் கொட்டிப் பயன்படுத்தியது. ஒப்பிட்டுப் பார்த்தால் மற்ற நாடுகளுக்கு அவர்கள் இவ்வாறு உதவியது கிடையாது .

ரஷ்யாவிடமிருந்து நாடுகளைப் பிரித்தெடுத்த வரலாறு இப்போது மறுவளமாகத் திரும்பி வருகிறது.

மேற்குலகம் அதன் அதிகார விரிவாக்கத்துக்காக ராணுவத்துக்குப் பல பில்லியன்களை முதலீடு செய்கிறது. அதே வேளையில், வளர்ந்து வரும் பொருளாதார சமத்துவமின்மையிலிருந்து உலகின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக புதிது புதிதாக எதிரிகளை உருவாக்க வேண்டிய அவசியம் மேற்கு நாடுகளுக்கு உள்ளது. நாட்டின் இருப்பைக் காக்கவே ரஷ்யா போராடுகிறது. அதன் பாரம்பரிய எல்லைகளையும் மக்களையும் பாதுகாக்கவே போராடுகிறது.

உக்ரைன் தேசத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. அதன் ஆட்சி அதிகார மையத்தையே எதிர்க்கிறோம்.

ரஷ்யாவை எதிர்ப்பதற்காக உக்ரைனை மேற்கு நாடுகள் பகடைக் காயாகப் பயன்படுத்துகின்றன. அமைதியான முறையில் தீர்வைக் காண எங்களால் இயன்றதைச் செய்துகொண்டிருக்கின்றோம். ஆனால் எங்கள் முதுகுக்குப் பின்னால் வேறு விதமான சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

-இவ்வாறு புடின் தனது உரையில் தெரிவித்தார்.

ஒன்றே முக்கால் மணிநேரம் நீடித்த உரையில் புடின், உக்ரைன் ஆட்சியாளர்களை முன்னாள் நாஸி ஜேர்மனியுடன் ஒப்பிட்டு அடிக்கடி விமர்சித்தார். ரஷ்யாவுக்காகப் போராடுகின்ற சகலருக்கும் தனது நன்றிக்கடனை வெளியிட்டார்.

(அ)

# உக்ரைன் ரயில் பாதைகளை மீண்டும் கட்டியெழுப்ப பிரிட்டன் முழு ஆதரவு!

கீவ், பெப். 23

ரஷ்யாவின் குண்டுவீச்சு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட ரயில் பாதைகளை மீண்டும் கட்டியெழுப்ப பிரிட்டன் ஆதரவு வழங்கவுள்ளது.

10 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள பொருள் மற்றும் இரயில் உபகரணங்களை வழங்குவதாக பிரிட்டன் அரசாங்கம், உறுதியளித்துள்ளது.

உக்ரைனின் ரயில்வேயை விரைவாக இயக்கவும், விரைவாக இயங்கும் வேகமான மாடுலர் ஸ்டீல் பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதை- லைனிங் பழுதுபார்க்கும் கருவிகளை உள்ளடக்கிய உதவிப் பொதி உதவும் என்று நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டு விளாடிமிர் புடின் படையெடுத்ததில் இருந்து உக்ரைனின் ரயில்வே, ரொக்கெட்டுகள் மற்றும் கப்பல் ஏவுகணைகளால் தாக்கப்பட்டு வருகிறது.

சேதம் இருந்தபோதிலும், ரயில்கள் இராணுவ முயற்சிகளுக்கு உயிர்நாடியாக விளங்கியுள்ளன மற்றும் நான்கு மில்லியன் மக்கள் தப்பிச் செல்ல உதவியுள்ளன.



பிரிட்டன் பொறியியல் நிறுவனமான மாபே பிரிட்ஜ் லிட்னி- குளோசெஸ்டர்ஷைரில், ரயில் மற்றும் போக்குவரத்துத் துறையுடன் வழங்கப்பட்ட முதலுதவி ஏற்றுமதி, ஏற்கனவே போலந்து வழியாக உக்ரைனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உக்ரைன் பொறியாளர்கள் குழுவும் ஜனவரி மாதம் பிரிட்டனுக்கு பயணம் செய்து, தங்கள் சொந்த அணிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக பாலங்களை எவ்வாறு இணைப்பது உள்ளிட்ட விடயங்களை கற்றுக்கொண்டனர்.

இதனிடையே, உக்ரைன் போரில் வெற்றி பெறுவதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று போக்குவரத்து செயலாளர் கூறினார்.

(அ)

# புடின் உடல்நிலையில் மீண்டும் பின்னடைவு

## அடுத்த மாதம் புதிய சிகிச்சை

மொஸ்கோ, பெப். 23

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் உடல்நிலை பாதிக்கப்பட்டு இருப்பதாக அடிக்கடி தகவல் வெளியானது.

70 வயதான அவர் பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதுபற்றி ரஷ்ய அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

இந்த நிலையில் ,புடின் உடல்நிலையில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இது தொடர்பாக தி மிரர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில், கடந்த வார இறுதியில் புதின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். ஆனால் அதில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கவில்லை.



இதனால் அவருக்கு புதிய சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த அந்த சிகிச்சை வருகிற மார்ச் மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதனால்,வரும் நாட்களில் புதினின் திட்டங்கள் மற்றும் முடிவுகள் பாதிக்கும். அவர் உக்ரைன் விவகாரத்தில் முழுமையாக பங்கேற்க முடியாது என்று தெரிவித்துள்ளது.

(அ)

# உக்ரைன் போரில் இதுவரை 19 ஆயிரம் பேருக்கு பாதிப்பு

## ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம்

நியூயோர்க், பெப். 23

உக்ரைனில் கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கிய போரில் இருந்து கிட்டத் தட்ட 19,000 மக்கள் பாதிக்கப்பட்டுள் ளனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கள் அலுவலகத்தின் அண்மைய அறிக்கை இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதில் 7,199 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 11,756 பேர் காயமடைந்தனர்.

கனரக பீரங்கிகளின் ஷெல் தாக்குதல்கள், பல ஏவுகணை ரொக்கெட் அமைப்புகள், ஏவுகணைகள் மற்றும் வான்வழித் தாக்குதல்கள் உட்பட வெடிக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தியதால் பெரும்பாலான உயிரிழப்புகள் ஏற்பட்டதாக அறிக்கை குறிப்பிடுகிறது.

(அ)

# ரஷ்யாவுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார தடை இன்னும் ஓரிரு தினங்களில்!

பிரஸ்ஸல்ஸ், பெப். 23

ரஷ்யாவுக்கு எதிரான மேலும் ஐரோப்பிய ஒன்றிய பொருளாதாரத் தடைகள் வார இறுதிக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதி தெரிவித்தார்.

வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல், பிரஸ்ஸல்ஸில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த கருத்தை வெளியிட்டார்.

இந்த நடவடிக்கைகள் நான்கு ரஷ்ய வங்கிகளையும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியையும் குறிவைக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

இது அடுத்த மணிநேரங்களில் அல்லது குறைந்தபட்சம் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அங்கீகரிக்கப்படும் என தெரிவித்தார்.ரஷ்யாவுக்கு எதிரான முகா மின் சமீபத்திய பொருளாதாரத் தடைகள் குறித்து விவாதிக்க வெளியுறவு அமைச்சர்கள் பிரஸ் ஸல்ஸில் சந்தித்த பின்னர் இந்த செய்தி வந்துள்ளது.



அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஏகோபித்த ஆதரவு தேவைப்படும் 10ஆவது தடைகள், கனரக வாகனங்கள் உட்பட இறப்பர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை குறிவைக்கும்.

(அ)

# இலங்கை ஒருநாள் அணியில் மத்தியூஸ்க்கு மீண்டும் இடம்!



கொழும்பு, பெப். 23

இலங்கையின் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அணியில் அஞ்சலோ மத்தியூஸ் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார். சுமார் இரு வருடங்களின் பின்னர் அவர் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

மத்தியூஸ், 218 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 3 சதங்கள், 40 அரைச் சதங்கள் உட்பட 5,835 ஓட்டங்களை குவித்துள்ளார். பந்துவீச்சில் 120 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ளார்.

இந்நிலையில், உலகக் கிண்ணத் தொடர் இந்த வருடத்தின் இறுதியில் இந்தியாவில் நடக்கவுள்ளது. மத்திய வரிசை துடுப்பாட்டத்தில் அவரின் இருப்பு அணிக்கு பலம் என்று தெரிவுக் குழு கருதியதால் அவரை அணியில் மீண்டும் சேர்த்துள்ளனர்.

இதனிடையே, நியூசிலாந்து அணிக்கு எதிராக மார்ச்சில் நடக்கவுள்ள 3 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணியில் அஞ்சலோ மத்தியூஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தொடரை முழுமையாக வெற்றிபெற்றால் இலங்கை நேரடியாக உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பாகிஸ்தான் அணிக்கு எதிராக இங்கிலாந்து சாதனை வெற்றி!

கேப்டவுன், பெப். 23

தென்னாபிரிக்காவில் நடக்கும் மகளிர் உலகக் கிண்த் தொடரில் பாகிஸ்தான் அணியை இங்கிலாந்து 114 ஓட்டங்களால் வெற்றிபெற்று சாதனை படைத்தது.

இதன் மூலம் தோல்வி அடையாத 2ஆவது அணியாக அரையிறுதியில் விளையாட தகுதிபெற்றது. மற்றைய குழுவில் அவுஸ்திரேலியா தோல்வி அடையாத அணியாகத் திகழ்கிறது.

பாகிஸ்தானுடனான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இங்கிலாந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து 213 ஓட்டங்களை குவித்தது.

இதன் மூலம் மகளிர் இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிகூடிய மொத்த எண்ணிக்கையைப் பதிவுசெய்து இங்கிலாந்து புதிய சாதனை நிலை நாட்டியது.

இங்கிலாந்தின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. 5ஆவது ஓவரில் மொத்த எண்ணிக்கை 33 ஓட்டங்களாக இருந்தபோது அதன் 2ஆவது விக்கெட் சரிந்தது.

எனினும் நெட் சிவர் ப்ரன்ட் 2 சிறந்த இணைப்பாட்டங்களை ஏற்படுத்தி இங்கிலாந்தை பலப்படுத்தினார். 3ஆவது விக்கெட்டில் டெனி வியட்டுடன் 74 ஓட்டங்களைப் பகிர்ந்த நெட் சிவர் ப்ரன்ட், 5ஆவது விக்கெட்டில் அமி ஜோன்ஸூடன் மேலும் 100 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

நெட் சிவர் ப்ரன்ட் 40 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 12 பௌண்ட்ரிகள, ஒரு சிக்ஸர் உட்பட ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களை விளாசினார்.

டெனி வியட் 33 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 59 ஓட்டங்களையும் அமி ஜோன்ஸ் 31 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தான் பந்துவீச்சில் பாத்திமா சானா 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

மிகவும் கடினமான 214 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 99 ஓட்டங்களை மாத்திரம் பெற்று படு தோல்வியடைந்தது.

பின்வரிசை வீராங்கனை தூபா ஹசன் 28 ஓட்டங்களைப் பெற்றார்.

இங்கிலாந்து பந்துவீச்சில் கெத்தரின் சிவர் ப்ரன்ட் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சார்ளி டீன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

### மகளிர் உலகக் கிண்ணம்:

## தென்னாபிரிக்கா அணி அரையிறுதிக்குத் தகுதி!

கேப்டவுன், பெப். 23

பங்களாதேஷ் அணியை 10 விக்கெட்களால் வெற்றி கொண்ட தென்னாபிரிக்கா அணி மகளிர் உலகக் கிண்ணத்தின் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதியில் விளையாட வேண்டுமானால் கட்டாயம் வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்ற அழுத்தத்துக்கு மத்தயில் களமிறங்கிய போட்டியை நடத்தும் நாடான தென்னாபிரிக்கா சகல துறைகளிலும் பிரகாசித்து போட்டியை வெற்றி கொண்டது.

முதலில் ஆடிய பங்களாதேஷ் 114 ஓட்டங்களைப் பெற்றது. பதில் கொடுத்து ஆடிய தென்னாபிரிக்கா 17.5 ஓவர்களில் 117 ஓட்டங்களைப் பெற்று மிகவும் இலகுவாக வெற்றிபெற்றது.

ஆரம்ப வீராங்கனைகளான லோரா வுல்வார்ட், தஸ்மின் ப்றிட்ஸ் ஆகிய இருவரும் மிகவும் பொறுமையுடன் துடுப்பெடுத்தாடி அரைச் சதங்களைக் குவித்து வெற்றி இலக்கைக் கடக்க உதவினர்.

லோரா வுல்வார்ட் 56 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 66 ஓட்டங்களுடனும் தஸ்மின் ப்றிட்ஸ் 4 பௌண்ட்ரிகள் உட்பட 50 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த பங்களாதேஷ் பெரும் சிரமத்துக்கு மத்தியில் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது.

அணித் தலைவி நிகார் சுல்தானா 30 ஓட்டங்களையும் சோபனா மோஸ்தரி 27 ஓட்டங்களையும் பெற்று துடுப்பாட்டத்தில் ஓரளவு பிரகாசித்தனர்.





## டெஸ்ட் தரவரிசை அண்டர்சன் முதலிடம்!

டுபாய், பெப். 23

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் பந்துவீச்சாளர்கள் வரிசையில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறந்த வீரர்களுக்கான பட்டியலை ஐ. சி. சி. நேற்று வெளியிட்டது.

இதன்படி பந்துவீச்சாளர் பட்டியலில் அவுஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸை பின்னுக்கு தள்ளி இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அண்டர்சன் முதலிடத்துக்கு முன்னேறினார்.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக பந்துவீசியதால் அவர் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின் 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடியதால் அவர் முன்னேறியுள்ளார். மேலும் பட் கம்மின்ஸ் 3ஆவது இடத்தில் உள்ளார்.

சகலதுறை வீரர்கள் பட்டியலில் இந்திய அணியின் ரவீந்திர ஜடேஜா முதலிடத்திலும் இரண்டாவது இடத்தில் அஸ்வினும் உள்ளனர். (ஐ)

## கடைசி தொடரில் கண்ணீருடன் விடைபெற்றார் சானியா மிர்சா!



டுபாய், பெப். 23

டுபாய் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் தோல்வி கண்டதையடுத்து இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கண்ணீருடன் விடைபெற்றார்.

இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா. ஒற்றையர்போட்டியில் பிரகாசிக்காவிட்டாலும், மகளிர் இரட்டையர், கலப்பு இரட்டையர் போட்டிகளில் பட்டங்களை வென்று வந்தார். 6 கிராண்ட்ஸ்லாம் இரட்டையர் போட்டிகளில் அவர் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

இந்நிலையில், அவுதிரேலியாவின் மெல்பர்னில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் சானியா மிர்சா கலந்துகொண்டார். அவுஸ்திரேலிய ஓப்பனில் தோல்வி கண்டதையடுத்து பெப்ரவரியில் நடைபெறவுள்ள துபாய் ஓப்பன் ரென்னிஸ் போட்டிதான் தனது கடைசி போட்டி என்று கண்ணீருடன் அறிவித்தார்.

இந்நிலையில் நேற்று மாலை மகளிர் இரட்டையர் பிரிவு போட்டியில் அமெரிக்காவின் மேடிசன் கீயுடன் ஜோடி சேர்ந்து களமிறங்கினார் சானியா மிர்சா. முதல் சுற்று ஆட்டத்தில் சானியா-மேடிசன் கீ ஜோடி, ரஷ்யாவின் வெரோனிகா குடெர்மிதோவா- எல். சம்சோனோவா ஜோடி மோதியது.

இதில், வெரோனிகா - சம்சோனோவா ஜோடி 6-4, 6-0 என்ற நேர் செற்களில் எளிதில் சானியா - மேடிசன் கீ ஜோடியை வீழ்த்தியது.

இதையடுத்து இந்தத் தொடரிலிருந்து சானியா மிர்சா - மேடிசன் கீ ஜோடி வெளியேறியது. தனது கடைசி போட்டி என்பதால் மைதானத்திலிருந்து கண்ணீருடன் வெளியேறினார் சானியா மிர்சா.

# தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு கோரி அடிப்படை உரிமை மனு தாக்கல்

கொழும்பு, பெப். 23

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக 2023 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுவிக்காமல் இருப்பதற்கு நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததன் ஊடாக பொதுமக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டாரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சட்டமா அதிபர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள், அரச அச்சக தலைவர் உள்ளிட்ட 9 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், நிதியமைச்சின் செயலாளர் நிதியை விடுவிக்க மறுத்ததன் காரணமாகவே, தேர்தலை நடத்த முடியாமல் போயுள்ளதாக மனுதாரர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே தபால் மூல வாக்களிப்பை கால வரையின்றி ஒத்திவைக்க தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

2023 வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக தேர்தல் நடவடிக்கைகளுக்காக 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய பாராளுமன்றம் அனுமதியளித்துள்ளதாக மனுதாரர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தேர்தல் பிற்போடப்பட்டால் இலங்கை ஜி.எஸ்.பி சலுகையை இழக்க நேரிடும்!

## எதிர்க்கட்சி எச்சரிக்கை



கொழும்பு, பெப். 23

**“நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால், அனைத்து அரச நிறுவனங்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒத்துழைப்பு வழங்காவிட்டால் குறித்த அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனையைப் பெற்றுக்கொடுக்க முடியும். அத்துடன் தேர்தல் நடத்தாவிட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையையும் இழக்க நேரிடும்.”**

இவ்வாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்- உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் நிதி அமைச்சு பணம் வழங்க முடியாது என்று கூறுகின்றது. அதேவேளை அச்சக பிரதானி தேர்தலுக்கான ஆவணங்களை அச்சிட முடியாது என்று கூறுகின்றார்.

இத்தகைய நிலையில் காலை வாரி விடாமல் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. அதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் மேற்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்று கட்டுப்பணமும் செலவிடப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிட அரச ஊழியர்கள் தங்கள் பதவிகளை இராஜிநாமா செய்துள்ளனர்.

அந்தநிலையிலேயே இன்று தேர்தல் நம்பிக்கையற்றதாகக் காணப்படுகின்றது. இதனால் பாரிய பிரச்னை ஏற்பட்டிருக்கின்றது. சர்வதேச ரீதியிலும் பெரும் பிரச்சினையை எதிர் நோக்க நேரிடும்.

ஐ.சீ.சீ.பி.ஆர். சட்டத்தின் கீழ் தேர்தல் நடத்தவில்லை என்றால் எங்களுக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இல்லாமல் போகின்றது. இப்போது ஜப்பான், ஜேர்மன் போன்ற நாடுகள் எம்மிடமிருந்து விலகிச் செல்ல முற்படுவதைக் காண முடிகின்றது. இவ்வாறான நிலையில் அரசு என்ன செய்கின்றது என்று கேட்கின்றேன்-என்றார்.

# 239 வாகனங்கள் அரசினால் இறக்குமதி செய்யவில்லை!

## மருந்துகளும் துறைமுகத்தில் இல்லை நிதி இராஜாங்க அமைச்சர் விளக்கம்



கொழும்பு, பெப். 23

239 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் உண்மை இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதாக எதிர்க்கட்சிகள் தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்து வந்த நிலையில் நிதி இராஜாங்க அமைச்சர் அதற்கு இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

மேலும் 2021 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்யவில்லை என்றும் அது குறித்து எந்த கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

அத்துடன் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள், வரி செலுத்தாமையால் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்தார். (அ)

# நான்கில் ஒருவருக்கு இலங்கையில் நீரிழிவு

கொழும்பு, பெப். 23

இலங்கையில் நான்கில் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் இலங்கையின் பல பல்கலைக்கழகங்கள், கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சுகாதார கொள்கை நிறுவனம் ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் முடிவிலேயே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் 23 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மூன்றில் ஒருவருக்கு, அதாவது 31 வீதமானவர்களுக்கு இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஐவரில் இருவர் (38 சதவீதம்) கண்டறியப்படாதவர்கள் என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. (அ)

# ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 1,137 உறுப்பினர்கள் பதவி நீக்கம்

கொழும்பு, பெப். 23

ஐக்கிய தேசிய கட்சியில் வெற்றி பெற்ற 1,137 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை பதவி நீக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த 1,137 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகி, வேறு கட்சிகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தியவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணி பிற்போடப்படும்

கொழும்பு, பெப். 23

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில், சில நாட்களுக்கு பிற்போடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பதிலளித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக, ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் நிலை குறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள், சில நாட்களுக்கு பிற்போகக்கூடும் என அவர் கூறினார்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக, ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதுமானதல்ல என்பதால், சில ஆசிரியர்கள் அந்தப் பணிகளுக்கு விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிவித்தார். (அ)

# வற்றாப்பளை மகா வித்தியாலய குடிதண்ணீர்ப் பிரச்னைக்கு தீர்வு

முல்லைத்தீவு, பெப். 23

வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் நிலவிய குடிதண்ணீர் நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் 750 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் நிலையில், பாடசாலையில் உள்ள கிணறு, குடிதண்ணீருக்கு பயன்படுத்த முடியாத நிலையில், பாடசாலைக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்தே மாணவர்களும் ஆசிரியர்களும் குடிதண்ணீரைப் பெற்று வந்தனர்.

இந்நிலையில், வற்றாப்பளை நண்பர்கள் வட்டம் ஊடாக ரூபாய் ஒன்றரை இலட்சம் நிதி செலவில் குடிதண்ணீருக்கான இணைப்புகள் வழங்கப்பட்டு, முல்லைத்தீவு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் பாடசாலைக்கான குடிதண்ணீர் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்றது.

பாடசாலைகளில் குடி தண்ணீர் வசதியை உருவாக்கித் தருமாறு பெற்றோர்கள் முல்லைத்தீவு, துணுக்காய் வலய கல்விப் பணிமனைகளில் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# இந்திய வீசா நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்த 5 பேர் கைது

கொழும்பு, பெப். 23

கொழும்பில் உள்ள இந்திய விஸா நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தும்முல்ல பிலிப் குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள இந்திய விஸா நிலையத்துக்குள் கடந்த 15 ஆம் திகதி அதிகாலை நுழைந்து தலைமைப் பிரதிநிதியின் மடிக்கணினி திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

இந்திய விஸா நிலையமான ஐ.வி.எஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தில் இருந்து மடிக்கணினி மற்றும் இரண்டு டிஜிட்டல் வீடியோ ரெக்கார்டர்கள் (டி.வி.ஆர்) திருடப்பட்டன.

இதன் காரணமாக விஸா வழங்கும் நடவடிக்கை ஸ்தம்பிதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மன்னார்..

அத்துடன் 1000 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மற்றும் பூநகரியில் இரண்டு காற்றாலை திட்டங்களில் 50 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்வதற்கு அதானி கிறீன் எனர்ஜிக்கு அரசாங்கம் தற்காலிக அனுமதி வழங்கியுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்றிரவு தெரிவித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தியாவின் முதல்நிலை பணக்காரராகவும் உலகளவில் மூன்றாவது இடத்திலும் அதானி இருந்தார். வரி ஏய்ப்பு மற்றும் சர்ச்சைகளால் அவரின் குழுமத்தின் பங்குகள் சரியவே உலகளவில் 17ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டார். இந்த நிலையில் கடந்த டிசெம்பரில் திட்டமிடப்பட்ட இந்த ஒப்பந்தம் திட்டமிட்டவாறு கைச்சாத்தாகியுள்ளது.

இதேசமயம், இந்த மின் உற்பத்தித் திட்டத்துக்குத் தேவையான சாத்தியக் கூறு ஆய்வுகள் மற்றும் அனுமதிகள் பெறப்படவில்லை. இதனால், இது சட்டவிரோதமான ஒப்பந்தம் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வரி...

முன்பாக நடைபெற்றது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஒரு வழி மூடப்பட்டது. நாற்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டிருந்தன.

சுகாதாரம், கல்வி, நீர், மின்சாரம், வங்கிக்கட்டமைப்பு, நீர்வழங்கல், துறைமுகம், எண்ணெய், விமான சேவைகள் உள்ளிட்ட தொழில்சங்கங்களின் கூட்டமைப்பினர் நேற்றைய எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்றனர்.

இந்நிலையில், வரிவிதிப்பு சட்டத்திற்கு எதிராக தொடர்ச்சியாக போராட்டம் நடத்தவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரத்னசிங்கம் குறிப்பிட்டார்.

இதனிடையே, முறையற்ற வரித் திருத்தத்துக்கு எதிராக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தினர் பல்கலைக்கழகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதற்கு தாம் இணங்கிய போதிலும், அந்த வரித்திருத்தம் முறையானதாக அமைய வேண்டும் என மின்சார பொறியியலாளர் சங்கத்தின் பிரதி செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன தெரிவித்தார்.

பல தடவைகள் வரித்திருத்தத்தை மறுசீரமைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த போதிலும், அதற்கான உரிய பதில் கிடைக்கப்பெறாமையினால் இன்றைய நாள் தேசிய எதிர்ப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே, முறையற்ற வரி அறவீட்டுக் கொள்கை மற்றும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு என்பனவற்றுக்கு எதிராக நீர்வழங்கல் தொழிற்சங்க கூட்டமைப்பினரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இரத்மலானையில் அமைந்துள்ள நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதான அலுவலகம் முன்பாகவும் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சுமார் 2 மணித்தியாலங்களாக இந்த எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இதனிடையே, அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக்கொள்கைக்கு எதிராக அநுராதபுரம் மருத்துவமனை மருத்துவர்கள், ரஜரட்டை பல்கலைக்கழக கலாநிதிகளின் சம்மேளனம் மற்றும் நீர்வழங்கல் சபையின் ஊழியர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

## இலங்கை...

தொடர்பாக முதன்முறையாக இந்தியா பகிரங்க மாக கருத்துரைத்துள்ளது.

இந்த நிலையில், இந்தியாவின் பிர பல ஊடகம் ஒன் ஸ்ரீறுக்கு ஜெய் சங்கர் அளித்த நேர்காணலில்,

இந்தியா தனது அயல் நாடுகளுக்கு உதவத் தயராக உள்ளது. பாகிஸ்தானின் எதிர்காலத்தை அதன் தெரிவுகளும் நடவடிக்கைகளுமே தீர்மானிக்கும். பாகிஸ்தான் தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து எவ்வாறு வெளிவரும் என்பதே அதன் எதிர்காலத்தை தீர்மானிக்கும்.

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளை இந்தியா உதவியது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு பாகிஸ்தானுடனான உறவிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது.

இலங்கை போன்ற நாடுகளில் இருக்கும் நிலைமை பாகிஸ்தானில் இல்லை. இலங்கையுடன் இந்தியாவின் நல்லெண்ணம் அதிகம். அத்துடன், அதன் பாதிப்புகளும் அதிகம். அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வும் உள்ளது - என்றும் சொன்னார். (ஐ)

## இந்திய...

கேள்விக்கு பதிலளிக்கை யிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படாமலிருப்பது, இலங்கையின் கடல்வளங்களை பாதுகாப்பது, இந்தியா வுடனான உறவுகள் பாதிக்கப் படாமல் இருப்பது ஆகியவையே எமது நோக்கம்.

தற்போது இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் மீன் பிடிப்பது தடைசெய்யப்பட்ட போதிலும், ஆயி ரக்கணக்கான மீனவர்கள் நுழைந்து மீன்பிடிக்கின்ற னர். வாரத்தில் சில நாட்கள் இந்திய மீனவர்கள் நுழைய அனுமதித்து, இந்திய கடற்படையின் மூலமே அவர்களைக் கட்டுப்படுத்தலாம்.

அத்துடன், அதன் மூலம் கிடைக்கும் பணத்தை வடக்கு மீனவர்களுக்கே செலவிடுவோம். அந்த திட்டத்தை இறுதி செய்வதற்கு முன்னர் வடக்கு மீனவர்கள், அரசியல் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளோம் - என்றார். (அ)

## விடுவிக்கப்பட்ட...

தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறையில் இராணுவம், கடற்படையிடம் இருந்து 108 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் நீண்டகாலமாக நடைபெற்றாலும் சிறிது சிறிதாக காணிகள் விடுவிக்கப்படுகின்ற போதிலும் ஓர் இடர்பாடு உள்ளது.

முகாம்களில் இருக்கின்றவர்களை நாங்கள் விடுவிக்கப்பட்ட இடங்களில் குடியேற்றக்கூடியவாறு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். விடுவிக்கப்பட்ட இடங்களில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் தங்கள் காணிகளை முழுமையாகக் கையேற்று அதனை உரிய பாவனைக்கு உட்படுத்தி னால் மாத்திரமே தொடர்ச்சியாகக் காணிகளை விடுவிப்பதற்கு உதவியாக இருக்கும்.

விடுவிக்கப்பட்ட காணிகளிலிருந்து இராணுவம் வெளியேறிய பின்னர், கட்டடங்களை அவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள். எனவே காணி உரிமையாளர்கள் தமது காணிகளை கையேற்கத்தவறுவதால் கட்டப் பொருட்கள் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்கள் தங்களின் காணிகளில் குடியேறுவதன் மூலமே நாங்கள் மேலதிகமாக படையினரிடம் உள்ள காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் - என்றும் இதன்போது சொன்னார். (ஐ)

# பிக்கு மாணவர்கள் சத்தியாகிரகம்!

கொழும்பு, பெப் 23

பௌத்த மற்றும் பாலி பல்கலைக் கழகத்தை உடனடியாக மீள ஆரம்பிக்குமாறு கோரி பிக்கு மாணவர்கள் தற்போது சத்தியாகிரக போராட்டத்தை நடத்தினர்.

நேற்று பிற்பகல் சத்தியாகிரகத்தை ஆரம்பித்த போது பொலிஸாஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீர் தாரை பிரயோகம் செய்தும் மாணவர்களை கலைத்தனர்.

எனினும், பொலிஸார் சென்றதன் பின்னர் பிக்கு மாணவர்கள் சத்தியாகிரக போராட்டத்தை மீண்டும் முன்னெடுத்தனர். (ஐ)

## மருத்துவ...

தெரிவித்துள்ளன என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திடம் தாம் முன் வைத்த 8 கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் புறக்கணிப்பு போராட்டம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பிரபாகரனின்...

சஞ்சிகை குழுமமான விகடனின் ஜூனியர் விகடன் இதழுக்கு அவர் அளித்த கேள்வி பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரிடம் எழுப்பப்பட்ட கேள்வியும் பதிலும் அப்படியே வருமாறு,

கேள்வி - தி. மு. க. கூட்டணியில் இருந்துகொண்டே ஈரோடு இடைத்தேர்தல் பரப்புரையில் உங்கள் கட்சி ஈடுபடவில்லையே... ஏன்?

பதில், - நான் சிறு வயதிலிருந்தே தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு எனக் களத்தில் நிற்பவன். அப்படிப்பட்ட என்னால் வாக்கு அரசியலுக்காக இனப்படுகொலைக்கு காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கும், அதன் சின்னத்துக்கும் வாக்கு சேகரிப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன.

எனவேதான், 'கை சின்னத்தில் வாக்களியுங்கள்' என காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்காக நான் இதுவரை வாக்கு கேட்டதில்லை - இனியும் கேட்கப் போவதில்லை. 'பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் மறைந்த செய்தி எனக்கு மிக மிக மகிழ்ச்சி அளிக்கிறது' என்று, மனிதநேயமற்ற கருத்தைச் சொன்னவர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன்." (ஐ)

## இந்தியாவுக்கு...

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்து நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளை நாட்டின் ஒருபகுதியாக வலுக்கட் டாயமாக 1948இல் இருந்து கையகப்படுத்தி வைத்துள்ள வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசிய பிரதேசத்தில் எங்களின் பொருளாதாரத்தை அழிக்கும் செயல்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுகின்றது.

வடக்கு கடலில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தமிழரை காட்டிக்கொடுத்த ஈ. பி. டி. பியின் நபரை கடற்றொழில் அமைச்சராக வைத்துக்கொண்டு விரலால் கண்ணைக் குத்தும் வேலைகளை அரசாங்கம் செய்கின்றது.

இந்திய மீனவருக்கு எமது கடலில் அனுமதி வழங்கப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் அவ்வாறு நடந்தால் அதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்களை அணி திரட்டி போராடுவோம் - என்றார். (ஐ)

## இறுதிப்...

அவர்களின், மொழி, கலாசாரம் உள்ளிட்டவைகளுக்கு உரிய வாய்ப்புகளை வழங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இன மற்றும் மத பேதங்களுக்கு அப்பால் சிந்தித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் பல் தன்மை ஒருமைப்பாட்டுடன் இவ்வாறு ஆரம்பிக்கப்படும் பயணமே வெற்றி பெற முடியும் அதன் மூலமான பொருளாதார முன்னேற்றமே நிலையானதாக அமையும்.

நாட்டில் இறுதி யுத்தத்தின் போது இலங்கைக்கு வந்த ஒன்பது கப்பல்களை எமது படையினர் வெற்றிகரமாக அழிப்பதற்கு அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் உறுதுணையாக அமைந்தது என்பதை மறந்து விடக்கூடாது. அந்த வகையில் சர்வதேச நாடுகளுடனான நல்லுறவுக்கு முன்னாள் வெளிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் செயல்பாடுகள் மிகவும் காத்திரமானதாக அமைந்தது என்றும் மறந்து விடக்கூடாது - என்றார்.

## யாழ்.போதனா...

இந்தச் செயல் முறையில் ஏற்பட்ட தொழில் நுட்ப தடங்கலால் கடந்த இரண்டு வருடங்களாக முறையாக செய்யப்பட வில்லை. இதனால், பண்ணையிலுள்ள சுத்திகரிக்கப்படும் இடத்தில் கழிவு நீர் வீதிகளில் வடிந்து பொதுமக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தியது.

இது தொடர்பில் போதனா மருத்துவமனை நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது. நிர்வாகம் இதனை சீராக்க நடவடிக்கை எடுத்தது. இதன்போது, பண்ணையிலுள்ள கழிவு நீர் தொட்டிக்குள் இறங்கவேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால், போதனா மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் சில மணித்தியாலங்கள் இடைநிறுத்தப்பட்டன. இதனால் யாழ். போதனா மருத்துவமனையில் கழிவு நீர் அதிகரித்தது.

இதேநேரம் யாழ். போதனா மருத்துவமனையில் குடிப்பதற்கு, கை கழுவுவதற்கு என்று இரு விதமாக தண்ணீரைப் பெறுகிறோம். திருநெல்வேலியிலிருந்து கிடைக்கும் தண்ணீர், மருத்துவமனை வளாகத்தில் மூன்று கிணறுகளில் இருந்து பெறப்படும் தண்ணீரை இவற்றுக்காக பயன்படுத்துகிறோம். இவற்றின் நீரை குளோறின் இட்டு தினமும் சுத்திகரிக்கப்படுவது வழமை.

கழிவுநீர் செல்வது தடைப்பட்டமையால் சடுதியாக நிலமட்டத்தில் கழிவு நீரின் தன்மை அதிகரித்தது. இதனால், யாழ். போதனா மருத்துவமனையின் நீர்நிலைகளில் கிருமி தாக்கம் ஏற்பட்டது. இதன் வெளிப்பாடாக யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சத்திர சிகிச்சை பிரிவு, விடுதிகளில் பணி செய்பவர்கள் என 400இற்கும் மேற்பட்டவர்கள் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டனர். இவர்கள் மருத்துவ அறிவு உள்ளவர்கள் என்பதால் தாமாகவே சிகிச்சை எடுத்தனர். 50 பேரளவில் மருத்துவமனை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றனர்.

தண்ணீரில் கிருமித்தொற்றின் தாக்கம் எமக்கு உடனடியாக தெரியவந்த நிலையில் கடந்த சனிக்கிழமை உடனடியாகவே கிணற்று நீரை பரிசோதனைக்காக அனுப்பினோம். அத்துடன், குளோறின் இட்டு கிருமி தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆய்வின் முடிவில் ஒருவகை பற்றீரியா காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. மிகையான குளோறின் ஊட்டத்தின் மூலம் இந்த கிருமிகள் அழிக்கப்பட்டன. தற்போது கிருமித் தொற்று நிலைமை கட்டுக்குள் உள்ளது இது ஒரு தற்காலிகமாக ஏற்பட்ட பிரச்னையே தவிர திட்டமிடப்பட்டது அல்ல. இதனை சீர் செய்துள்ளோம். மக்கள் அச்சமடையத் தேவையில்லை - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பிசாசுகள் போல் நடக்கின்றார்கள்!

## எதிரணியினரை கடிந்தார் ரணில்

கொழும்பு, பெப். 23

எதிரணியில் உள்ளவர்கள் சிலர் அதியுயர் சபையில் பிசாசுகள் போல் செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி எதிரணி உறுப்பினர்கள் சபைக்குள் நேற்று முன் தினம் போராட்டம் நடத்தியதால், பாராளுமன்றம் நேற்று காலை 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

எதிரணி உறுப்பினர்களின் இந்தப் போராட்டம் தொடர்பில், ஆளும் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருடன் நேற்று முன் தினம் மாலை நடத்திய கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த விடயத்தை தெரிவித்தார் என தெரியவருகிறது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அதியுயர் சபையே பாராளுமன்றம். மக்களின் பிரதிநிதிகளே இங்கு கூடுகின்றனர்.

இவர்கள் நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம் குறித்து மிகவும் கரிசனையுடன் செயற்படவேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் சபைக்குள் வந்து சுயநல கட்சி அரசியலுக்காகச் செயற்பட்டால் வீழ்ச்சி அடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பணிகள் தடைப்படும்.

இதை உணர்ந்து கொண்டும் எதிரணியினர் உள்ளவர்கள் சிலர் அதியுயர் சபையில் பிசாசுகள் போல் செயற்படுகின்றனர். அவர்கள் திருந்தி நடக்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது குறித்து நீதிமன்றம் முடிவெடுக்கும்.

பாராளுமன்றமும் அது தொடர்பில் கவனம் செலுத்தும். அதியுயர் சபையே பாராளுமன்றம். அங்கு எடுக்கப்படும் இறுதி முடிவுகளை எவரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது.

இந்நிலையில், எதிரணியினர் அவசரப்பட்டு தேர்தலை நடத்த வேண்டும் என்று சபைக்குள் போராடுவது எந்த வகையில் நியாயமானது? அவர்கள் பொறுப்பற்ற வகையில் செயற்படுகின்றனர் - என்றார். (அ)

# இந்தியாவின் நிபந்தனைகளுக்கு உடன்பட சீனா அடியோடு மறுப்பு

## நிலைமையை விளக்கினார் ஜனாதிபதி



கொழும்பு, பெப். 23

**இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் நாடுகள் முன்வைத்த அதே நிபந்தனைகளுக்கு சீனா உடன்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அனைத்து கடன் வழங்குநர்களும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து ஒருமித்த கருத்தை எட்டவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் முன்மொழிந்துள்ளது என அவர் கூறினார்.

எவ்வாறாயினும் இந்தியாவின் நிபந்தனைகளுக்கு பாரிஸ் கிளப் ஒப்புக்கொண்டாலும், அதை ஏற்க மறுத்த சீனா, தனது சொந்த நிபந்தனைகளை முன்வைக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இன்று பெங்களூரில் நடைபெறும் ஜி-20 நாடுகளின் நிதி அமைச்சர்கள் கலந்துரையாடலில் பொருளாதார வீழ்ச்சியடைந்த நாடுகளுக்கு உதவுவது குறித்து ஆராயப்படவுள்ளது.

குறித்த சந்திப்பில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முறை குறித்து சீன நிதியமைச்சருடன் கலந்துரையாட உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

மேலும் சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்காவிடின் எரிபொருள், மின்வெட்டு என பொது மக்கள் பாரிய சிரமங்களை அனுபவிக்க நேரிடும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# 4 பெண்கள் உட்பட 21 அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி விடுதலை

கொழும்பு, பெப்

விடுதலை புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாணம் மற்றும் கொழும்பில் கைது செய்யப்பட்ட 21 தமிழ் அரசியல் கைதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தினால் எதுவித குற்றசாட்டுக்களும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 21 சந்தேக நபர்களின் வழக்கு விசாரணை நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

குறித்த 21 நபர்களும் 2014 ஆண்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு வவுனியா,கிளிநொச்சி, பூஸா ஆகிய பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் முகாம்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் சில மாதங்கள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்தனர்.

சிறைக் கைதிகள் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்ட நிலையில் அவர்களின் உறவினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் நாடளாவிய ரீதியில் பல சாத்வீக போராட்டம் மேற்கொண்டதன் காரணமாக 2015,2016 ஆண்டு பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் குறித்த 21 நபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த நபர்களின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் விசாரணைகளின் பின்னர் 21 நபர்களும் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இன்றி அனைத்து வழக்குகளிலும் இருந்து எந்தவித நிபந்தனைகளும் இன்றி கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ)

# சகல உத்தரவாதங்களையும் இலங்கை விரைவில் பெறும்

## சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

கொழும்பு, பெப். 23

இலங்கை தனது இருதரப்புக் கடன் வழங்குநர்களிடமிருந்தும் விரைவில் நிதியுதவிக்கான உத்தரவாதங்களைப் பெறுவார்கள் என சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அவ்வாறு கிடைத்தால் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கான 2.9 பில்லியன் டொலர் கடனுதவியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு அனுமதி வழங்கும் எனக் கூறியுள்ளது.

இலங்கை அவர்களுக்கு வழங்கவேண்டிய கடனை மறுசீரமைக்க இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் நாடுகளிடம் இருந்து தெளிவான மற்றும் குறிப்பிட்ட நிதி உத்தரவாதங்களைப் பெற்றுள்ளது.

ஆனால், இலங்கையின் மிகப்பெரிய இருதரப்புக் கடன் வழங்குநராக இருக்கும் சீனா, முழு அளவிலான நிதி உத்தரவாதம் இல்லாமல் இரண்டு வருட கால அவகாசத்தை மாத்திரம் வழங்கியுள்ளது.

ஆகவே அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை முன்னெடுத்து வருவதாகவும் சர்வதேச நாணய நிதியம் என்ற வகையில், தாமும் உதவி செய்வதாகவும் நாணய நிதியத்தின் ஆசிய தலைவர் கிருஷ்ணா சீனிவாசன் கூறினார்.

இதேநேரம் சீனாவின் நிதியுதவி உத்தரவாதங்கள் இல்லாமல் இலங்கைக்கு நிதியுதவியை வழங்குவது குறித்த பரிசீலனைகள் தொடர்பான செய்திகள் ஊகங்கள் என்றும் கிருஷ்ணா சீனிவாசன் குறிப்பிட்டார். (அ)

# ஆயுதம் தாங்கிய அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் புலனாய்வுப் பிரிவினரை நிராயுதபாணிகளாக்கினர்!

## விமல் வீரவன்ஸ சபையில் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 23

இலங்கைக்கு அண்மையில் பயணம் செய்த அமெரிக்காவின் பாதுகாப்பு அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் இருந்தவர்களின் ஆயுதங்கள் களைந்த பின்னர், ஆயுதங்களுடன் அலுவலகத்துக்குள் பிரவேசித்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ பாராளுமன்றில் நேற்று இந்த தகவலை வெளியிட்டார்.

இதன் மூலம் இலங்கையின் புலனாய்வுத்தரவுகள் அனைத்தும் அமெரிக்கப் புலனாய்வு மையத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்தே முடிவுகள் எடுக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக 2001 ஆம் ஆண்டு இவ்வாறான நிலைமை தோற்றுவிக்கப்பட்டபோதும், அது பின்னர் 2004ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டதாக விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தின் இந்து பசுபிக் பாதுகாப்பு துணை உதவிச்செயலாளர் ஜெடியா ரோயல் தலைமையில், இலங்கைக்கு வந்தவர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

இந்தநிலையில் இவர்களின் இலங்கைக்கான பயண நோக்கம் என்ன? ஜனாதிபதியுடனும், பாதுகாப்பு செயலாளருடன் அவர்கள் எது குறித்து பேசினார்கள் என்ற விடயத்தை அரசாங்கம் பாராளுமன்றில் வெளிப்படுத்தவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.